# அரசு ஊழியர்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாத இதழ்

ஆசிரியர்: ஆ.செல்வம்

ஜூன் - 2024

தனிப்பிரதி ரூ.20

## சர்வாதிகாரத்திற்கு முடிவுரை எழுதிய 2024 நாடாளுமன்ற தேர்தல்



# அமைப்பு தின நிகழ்வுகள்



நாமக்கல்


கரூர்


விருது நகர்


திருவள்ளூர்


செங்கல்பட்டு


சேலம் மாவட்ட பயிற்சி வகுப்பு


திருச்சி மாவட்ட பயிற்சி வகுப்பு



மதுரை மாவட்ட பயிற்சி வகுப்பு

# அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2024 ஜூன்**

**மலர்:45 இதழ்:06**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:
**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

வரைகலை: கார்ட்டூன்வாசி

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி 9677003178

இதழ் ஒருங்கிணைப்பு: ஜிஜி



**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

ஆண்டுச் சந்தா : ரூ.200
தனி இதழ் : ரூ.20



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும், நம்முடைய தலையாயக் கடமைகளும்!** *தலைவர் மடல் ............................4*
2. **நாடாளுமன்ற தேர்தலும் ஒன்றிய (பி.ஜே.பி) அரசும்!** *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து............................8*
4. **கட்டணமில்லா சிகிச்சையை உறுதிப்படுத்த காப்பீட்டு நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை** ...............................*12*
5. **மோடியின் சர்வாதிகார வீழ்ச்சியும், தமிழகத்தில் பா.ஜ.க. வளர்ச்சியும்......***14*
6. **திருச்சி மாவட்ட அமைப்புதின கருத்தரங்கம்** ................................*15*
7. **திருச்சி துறைத்தேர்வு பயிற்சி வகுப்பு** .............................*15*
8. **கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் - நாகப்பட்டினம்** ...............................*16*
9. **சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வருடன் சந்திப்பு** ....................*17*
10. **சேலம் மாவட்ட பயிற்சி வகுப்பு** .......*17*
11. **மதுரை மாவட்ட பயிற்சி வகுப்பு** ......*17*
12. **கிழிந்து தொங்கக்கூடும் உன் முற்போக்கு கயமைத்தனங்கள்...**.........*18*
13. **அதானி - பாஜக கூட்டணியிடமிருந்து பொதுச் சொத்துக்களைக் காப்போம்!**.................................*19*
14. **ஆர்எஸ்எஸ் நபரின் தலைமைக்கு எதிராக போராடிய மாணவி** ............*22*
15. **அஞ்சலி - தோழர் எஸ் சேது** .........*23*
16. **பழங்குடியினர் விடுதலைப் போராட்ட வீரர் பிர்சா முண்டா** .....................*24*
17. **அஞ்சலி - தோழர் எம். இராமசாமி**....*25*
18. **தமிழர்கள் மீது இத்தனை காழ்ப்பும் வெறுப்பும் ஏன்?** ..........................*26*
19. **புதிய தேடல்களில் தொலைகின்ற வாழ்க்கை!** .................................*28*
20. **கூட்டாட்சிக் கட்டமைப்பை தகர்க்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு** ....................*32*

தலைவர் மடல்

# நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளும், நம்முடைய தலையாயக் கடமைகளும்!

18வது மக்களவைத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. தனிப்பெரும்பான்மையோடு ஆட்சியை நடத்தி இந்திய மக்களை பல இடர்பாடுகளுக்கு உள்ளாக்கிய பாரதிய ஜனதா கட்சி இப்போது கூட்டணி கட்சிகளின் தயவோடு ஆட்சி அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில் தமிழ்நாடு - புதுச்சேரியில் 40 தொகுதி களையும் கைப்பற்றி, திமுக தலைமை யிலான 'இந்தியா' கூட்டணி அபார வெற்றியைப் பெற்றுள்ளது.

கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் போன்ற மக்களின் அடிப்படை பிரச்னைகளில் அக்கறை கொள்ளாத ஒரு மைய அரசுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டியிருக்கிறார்கள்.


ஆனாலும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் நீண்ட கால பிரச்சாரமும் மோடியின் 10 ஆண்டு கால ஆட்சியும் ஒரு இந்துத்துவா வாக்கு வங்கியை உருவாக்கியுள்ளது என்பதை குறைத்து மதிப்பிடக்கூடாது என்பதை இந்தத் தேர்தல் உணர்த்தியுள்ளது. அதனால்தான் கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால் நம்பிக்கை கொண்டுள்ள மக்களில் ஒரு பகுதியினர் தங்கள் வாக்குகளை பாரதிய ஜனதா கட்சிக்கு அளித்து தொங்கல் நாடாளுமன்றத்தை ஏற்படுத்திடக் காரணமாக இருந்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலில் மத உணர்வுகளை கிளப்பிவிடுவது எனும் தன்னிடமுள்ள துருப்பு சீட்டை தீவீரமாகவும் மூர்க்கத்தனமாகவும் பயன்படுத்தியது பாஜக. இது பாஜகவுக்கு எதிர்பார்த்த பலன்களை அளிக்காவிட்டாலும் ஒருசில மாநிலங்களில் இந்தப் பிரச்சாரம் எடுபட்டிருக்கிறது என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

2019ல் நடந்தது போல புல்வாமா – பாலக்கோடு தாக்குதல்களும் அதன் அடிப்படையில் அதீத தேசிய வெறி மற்றும் மத உணர்வுகள் கிளப்பிவிடப்பட்டது போல ஒரு அசாதாரண சூழல் இந்தத் தேர்தலில் இல்லை என்றபோதிலும் மக்கள் தமது வாழ்வாதார பிரச்சனைகள் அடிப்படையில் இந்த தேர்தலை அணுகும் சூழல் உள்ளது என்பதை முதல் மூன்றுகட்ட தேர்தல்கள் நிரூபித்த பிறகு பாஜக இத்தகைய சூழல் பாஜகவின் வெற்றிக்கு பயன்படாது என உணர்ந்து கொண்டு வெறுப்பு அரசியலையும் மதவெறி தூண்டும் பேச்சுக்களையும் பேசி மக்களை தங்கள் வாழ்வாதார பிரச்னைகளிலிருந்து திசை திருப்பி இந்து, இந்துத்துவா, ராமர் கோவில் போன்ற மத உணர்வுகளை தூண்டியெழுப்பும் வேலைகளை செய்தார்கள். பிரதமரும் உள்துறை அமைச்சரும் மற்ற பாஜக தலைவர்களும் தேர்தல் விதிமுறைகளை மீறி வெறுப்பு பேச்சுக்களையும், மத வெறிகளையும் தூண்டினர். தேர்தல் ஆணையம் அதைக் கண்டிக்காமல் நியாயப்படுத்தும் வேலையை செய்து தன்னுடைய விசுவாசத்தைக் காட்டிக்கொண்டது. பாஜக இந்த அளவுக்கேனும் இடங்களை பெற்றிருப்பதற்கு தேர்தல் ஆணையமும் ஒரு முக்கிய காரணம் என்பதை மறுப்பதற்கில்லை.

இந்துத்துவா வாக்கு வங்கி ஒப்பீட்டளவில் குறைவான சதவீதம் என்றாலும் அதுதான் பாஜகவின் அடித்தளமாக உள்ளது. எந்த சூழ்நிலையிலும் இந்த வாக்கு வங்கி தடம் மாறுவது இல்லை. 2019ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலும் இதனை வெளிப்படுத்தியது. 2023 டிசம்பரில் நடந்த 5 சட்ட மன்ற தேர்தல் முடிவுகள் இதனை மேலும் உறுதிப் படுத்தின. அனைத்து மதிப்பீடுகளுக்கும் மாறாக ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர் ஆகிய மாநிலங்களில் பாஜக வென்றது. பாஜக இத்தகைய வெற்றிகளை பதிவு செய்ததற்கு முக்கிய காரணம் இந்துத்துவா வாக்கு வங்கி வடமாநிலங்களில் வலுப்பெற்றது என்பதாகும். இந்த இந்துத்துவா வாக்கு வங்கியை தக்க வைக்க சங்பரிவாரம் கடுமையாக முயற்சிகளை

எடுத்து வருகிறது. 2024 தேர்தல்கள் தொடங்கிய பொழுது இந்துத்துவா வாக்கு வங்கியும், வளர்ச்சி பற்றி பிரதமர் மோடி உருவாக்கி வைத்துள்ள பொய்யான பிம்பமும் 2047- 2100 என நீண்ட கால கனவு பற்றிய மாயைகளும் மக்கள் மனதை வென்றுவிடும் என மோடி நினைத்தார். ராமர் கோவில் தொடக்க விழாவும் அதில், தான் முதன்மை பூசாரி போல செயல்பட்டதும் மக்கள் மனதில் நீங்காத இடம் பிடித்து 400 இடங்களுக்கு மேல் வென்று மூன்றாவது வெற்றியை பதிவு செய்துவிடுவோம் என மோடியும் பாஜகவினரும் மனப்பால் குடித்தனர். ஆனால் கள நிலவரம் அதற்கு மாறாக இருந்தது. அரசியல் சார்பற்ற இருவகை ஆய்வுகள் இந்தத் தேர்தலில் விலைவாசி, வேலையின்மை. அதீத பொருளாதார அசமத்துவம் ஆகியவை மக்கள் மனதில் கடும் அதிருப்தியை உருவாக்கியுள்ளது என்பதை மிகத்தெளிவாக படம்பிடித்து காட்டின. கள நிலவரத்தை பிரதிபலிக்கும் வகையில் ‘இந்தியா’ அணியின் கட்சிகள் தமது தேர்தல் பிரச்சார வியூகங்களை அமைத்தனர். ஒவ்வொரு மாநிலத்திலும் தனித் தன்மையுடன் இந்த வியூகம் அமைந்தது. ‘இந்தியா’ அணியின் அங்கமாக உள்ள கட்சிகளின் தேர்தல் அறிக்கைகள் மக்களிடையே பெரும் தாக்கத்தை உருவாக்கின. பாஜகவின் தாராளமய நாசகர கொள்கைகளையும் இந்துத்துவாவின் அழிவுபூர்வமான விளைவுகளையும் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகள் வலுவாக அம்பலப்படுத்தி மாற்றுத் திட்டத்தை முன்வைத்தன. அத்தகைய மாற்று திட்டங்கள் மூலம் எவ்வாறு ஒரு மாநில அரசாங்கம் சிறப்பாக செயல்பட முடியும் என்பதை கேரளா அனுபவம் மூலம் இடதுசாரி கட்சிகள் செய்து காட்டின. தமிழ்நாட்டில் தி.மு.க தலைமையிலான அணி பாஜக-அதிமுகவுக்கு எதிராக வலுவான களத்தை அமைத்தது.

பீகாரில் நிதீஷ்குமாரை தன் பக்கம் இழுத்த பின்னரும் பாஜகவால் ஓரளவுக்கே வெற்றியை சுவாசிக்க முடிந்துள்ளது. தனது இழப்பை சரிகட்ட மகாராஷ்டிராவில் சிவசேனாவையும் தேசிய வாத காங்கிரசையும் பாஜக உடைத்தது. காங்கிரசிலிருந்து முன்னாள் முதல்வர்




உட்பட பலரை இழுத்தது. ஆனால் இவை எதுவும் பாஜகவுக்கு பலன் அளிக்கவில்லை. சென்றமுறை 48ல் 41 தொகுதிகளில் பாஜக கூட்டணி வென்றது. இந்த முறை கணிசமான தொகுதிகள் சரிந்துள்ளன.. பஞ்சாப்பில் பாஜகவுடன் சேர அகாலிதளமும் விரும்பவில்லை. “இன்று முஸ்லீம்களுக்கு என்ன நடக்கிறதோ அது நாளை சீக்கியர்களுக்கு நடக்காது என்று எந்த உத்தரவாதமும் இல்லை” எனும் அகாலி தளத்தின் கூற்று பஞ்சாப்பின் கவலையை வெளிப் படுத்துகிறது. பஞ்சாப் மற்றும் ஹரியானாவில் விவசாயிகளின் கோபம் பாஜகவுக்கு எதிராக இன்னும் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டுள்ளது. முற்றிலும் தனிமைப்பட்டுள்ள பாஜகவுக்கு பஞ்சாப்பிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஹரியானாவிலும் பாஜகவின் இடங்களைக் கைப்பற்றி இந்தியா கூட்டணி முன்னேறியுள்ளது. மேற்கு வங்கத்திலும் பாஜக எவ்வித முன்னேற்றத்தையும் சாதிக்கவில்லை. ஹேமந்த் சோரனின் கைது ஜார்கண்டிலும் அரவிந்த் கெஜிர்வால் கைது தில்லியிலும் பாஜகவிற்கு சாதகத்தை அல்ல; பாதகத்தை விளைவித்துள்ளது. காங்கிரசின் தேர்தல் அறிக்கையும் மக்களிடையே தாக்கத்தை உருவாக்கியுள்ளது. காங்கிரசின் தேர்தல்

அறிக்கையில் எவ்வித தீவிர மாற்று பொருளாதார திட்டங்களும் இல்லை. ஆனால் பல ஆண்டுகளுக்கு பின்னர் சாதாரண மக்களின் மனதில் இடம்பிடிக்கும் வகையில் பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. வேலையின்மையைப் போக்குவது, ஏழை பெண்களுக்கு வாழ்வாதார உரிமை, அக்னிவீர் திட்டம் ரத்து, சாதிவாரி கணக் கெடுப்பு ஆகியவை குறித்து காங்கிரசின் அறிக்கை உறுதிபட பேசுகிறது. அது தாக்கத்தையும் உருவாக்கியுள்ளது.

எனவேதான் தேர்தலின் பேசு பொருளாக இருந்த வாழ்வாதார பிரச்சனைகள் என்பதை மத உணர்வாக மாற்ற கடும் முயற்சிகளை பாஜகவும் மோடியும் செய்தனர். இந்துக்களுக்கு எதிராக முஸ்லிம்களை நிறுத்துவதன் மூலம் இந்துக்களிடையே உள்ள சாதிய வேற்றுமைகளை மூடி மறைக்க பாஜக முயன்றது. இந்தியா அணி வலுவாக சாதிவாரி கணக்கெடுப்பை முன்மொழிய; பா.ஜ.க அந்த திட்டத்தை சிதைக்க எத்தனித்தது. அந்த திட்டம் என்பதே இந்துக்களின் சொத்துக்களையும் இடஒதுக்கீடு நன்மைகளையும் முஸ்லீம்களுக்கு தாரைவார்க்க என பிரச்சாரம் செய்தது. இந்தியா அணி தென் பகுதியை பிரித்து தேசத்தை துண்டாட முயல்கின்றனர் எனவும் பீதியை கிளப்ப மோடி முயன்றார்.

இந்தியா அணியின் கட்சிகள் வசதிபடைத்த 10% பேருக்கு மாற்றாக 90% மக்களின் வாழ்வு நிலையை முன்னேற்ற பேசினர். பாஜகவோ 14% முஸ்லீம்க ளுக்கு எதிராக 80% இந்துக்களை முன்நிறுத்த பேசசியது. வேலையின்மை, விலைவாசி, கூட்டாட்சி தத்துவம் என இந்தியா அணி பேசியது. பாஜகவோ இந்துத்துவா, மோடி துதிபாடல், தொலைதூர சாத்தியமற்ற கனவுகள் பற்றி பேசசியது. இந்தியாவின் பன்முகத்தன்மையை காக்க இந்தியா அணி விரும்புகிறது. பாஜக ஒருமுகத்தன்மை கொண்ட இந்தியா உருவாக்க முயல்கிறது. பாஜகவின் பிரச்சாரங்கள் மக்களிடம் பெரிதாக எடுபடவில்லை. இதுவே பாஜகவையும் மோடியையும் மேலும் மேலும் மதப் பிளவு வாதங்களை மேலும் தீவிரப்படுத்த வழிசெய்தன. பாஜகவினர் தமது வெற்றிக்காக எத்தகைய செயல்களையும் அரங்கேற்ற தயங்க மாட்டார்கள் என்பதை புல்வாமா- பாலக்கோடு போன்ற கடந்த கால அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. இவற்றை மீறி இந்திய வாக்காளர்கள் வாழ்வாதார அடிப்படையில் தமது வாக்குகளை செலுத்தி பாஜகவுக்கு பாடம் புகட்டியிருக்கிறார்கள்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் திமுக கூட்டணி அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது என்றுதான் கூற வேண்டும். அறுதிப் பெரும்பான்மை பலத்திலிருந்த மோடி அரசாங்கம் கூட்டணி கட்சிகளின் தயவோடு ஆட்சி அமைக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ள நிலையில் திமுக கூட்டணியின் 40க்கு 40 வெற்றி மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்த வெற்றி தமிழகத்தின் தேவைகளை தமிழகத்திற்கு வந்து சேர வேண்டிய திட்டங்களை, தர வேண்டிய நிதிகளை இந்திய அரசாங்கத்திடம் இன்னும் சத்தமாக குரலெழுப்பிக் கேட்க வகை செய்துள்ளது. எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையின்மையால் மட்டுமல்ல அண்ணாமலை போன்ற தமிழகத்தின் வரலாறு தெரியாமல் பேசும் தலைவர்களின் வெறுப்பு பேச்சுக்களாலும் மதவெறி தூண்டல்களாலும் அவர்களின் தோல்வி நிகழ்ந்துள்ளது என்றால் மிகையில்லை. மேலும் தமிழகத்தின் பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள் திமுக.

அதிமுக போன்ற திராவிடக் கட்சிகளை குறைகூறி மக்களிடம் செல்வாக்கு பெற்றுவிடலாம் என்ற நினைத்தார்களே தவிர தமிழகத்தின் நலன்களை கண்டுகொள்ளாத மத்திய அரசிடம் இருந்து தமிழகத்திற்கு வந்து சேரவேண்டிய திட்டங்களை தமிழகத்திற்கு கொண்டுவந்து சேர்க்க நடவடிக்கை எடுக்க த்தவறியதாலும் அவர்களுக்கு மக்கள் இந்தத் தோல்வியை பரிசார வழங்கியிருக்கிறார்கள். இனிமேலும் தமிழக பாஜக தலைவர்கள் தமிழர்கள் மற்றும் தமிழகத்தின் நலன்களுக்காக மத்திய அரசிடம் குரல் கொடுக்க வேண்டும். தமிழகத்தின் திட்டங்களை நலன்கைள புறக்கணித்த எந்த தேசிய கட்சியும் தமிழகத்தில் காலூன்ற முடியாது என்கிற பாலபாடத்தை அவர்கள் கற்றுக்கொண்டு உண்மையான மக்கள்

சேவையை தமிழக மக்களுக்கு செய்தாலொழிய மக்களின் ஆதரவைப் பெறமுடியாது என்பதை உணர வேண்டும். வெறுப்பு அரசியல் பேச்சுக்கள், மத வெறியை வளர்க்கும் விஷயங்களை விட்டுவிட வேண்டும். வடமாநிலங்களைப் போலவே தமிழகத்திலும் வெறுப்புப் பேச்சுக்களும் மதவெறியைத் தூண்டும் நடவடிக்கைகளும் கைகொடுக்கும் என்று நினைத்தால் அவர்களுக்கு ஏமாற்றம் தான் மிஞ்சும். ஏனென்றால் இது பெரியார், காமராஜர். அண்ணா போன்ற பகுத்தறிவு சிந்தனையாளர்கள் வளர்த்தெடுத்த தமிழகம். இங்கு மக்களுக்கு ஆக்கபூர்வமான பணிகளை செய்யாமல் ஆட்சி அரியணையில் அமர முடியாது.

திராவிட முன்னேற்றக் கழக கூட்டணியின் இந்த மகத்தான வெற்றி அரசு ஊழியர்கள் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சியான விஷயம்தான் என்றாலும், இதன் காரணமாக நம்முடைய கோரிக்கைகளை முதல்வர் நிறைவேற்றிவிடுவார் என்று நாம் வாளாயிருந்துவிட முடியாது. திமுகவின் இந்த இமாலய வெற்றியை நமக்கு சாதகமாக்கிட தொடர் நடவடிக்கைகளை முன்பிருந்ததை விட இன்னும் வீரமாக, வேகமாக மேற்கொள்ள வேண்டிய கடமையுணர்வு நமக்கு உள்ளது. “அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கோரிக்கைகளை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன்” என்று சொன்ன முதல்வரின் உறுதி மொழிதான் நமக்கு இருக்கக்கூடிய ஒரே நம்பிக்கை. அந்த நம்பிக்கையை வெற்றியாக மாற்ற நாம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். இயக்கங்கள் நடத்திக் கொண்டேயிருக்க வேண்டும். இயக்கத்தின் செயல்பாடுகள் இன்னும் விரைவு படுத்தப்பட வேண்டும். பாராளுமன்ற வெற்றியின் பரிசாக நமது கோரிக்கைகளில் சிலவற்றையேனும் நிறைவேற்றிக்கொள்ள தமிழக முதல்வரை சந்தித்து நினைவூட்டல் செய்ய வேண்டும். முதல்வர் அவர்கள் நமக்கு நிறைவேற்றித்தர வேண்டிய கோரிக்கைகள் உள்ளது என்பதை தொடர்ந்து அவருடைய கவனத்திற்கு கொண்டு செல்வதன் மூலமாக மட்டுமே நம்முடைய இலக்கை நாம் எட்ட முடியும். எனவே இனி ஒவ்வொரு நாளும் நாம் அதற்கான பாதையில் நமது பயணத்தை தொடர வேண்டும். தளராத முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நாம் முதல்வரின் கவனத்தில் இருக்கிறோம் என்ற கருத்தாக்கத்தை தொடர்ந்து நிலைநிறுத்த அனைத்து வழிமுறைகளையும் நாம் இன்றிலிருந்தே தொடங்குவோம். நம்முடைய கோரிக்கைகள் அனைத்தையும் வெற்றிகொள்ள தொடர் நடவடிக்கைகள், கவனஈர்ப்புகள், பேச்சு வார்த்தைகள் எல்லா வாய்ப்புகளையும் கைக்கொள்வோம். நமது வாழ்வாதார கோரிக்கைகள வென்றெடுப்போம். ●

## சூடா ஒரு கோப்பை சூப்

# இது நம் நாடு!

மக்களே! குளம் தூரெடுங்கள்;
வீதி பெருக்குங்கள்;
சாலை செப்பனிடுங்கள்;
சாக்கடை தள்ளுங்கள்;
பேருந்துப் பழுது நீக்குங்கள்;
மருத்துவமனை கழுவுங்கள்;
பள்ளி இடுபாடு செப்பனிடுங்கள்;
மாணவருக்கு வகுப்பெடுங்கள்;
நெரிசலை நெறிப்படுத்துங்கள்;
இருட்டில் விளக்கேற்றுங்கள்;
பழுதான பாலம் பராமரியுங்கள்;
கோயில் பேணுங்கள்;
கடவுள்சிலை காவல் செய்யுங்கள்.

அரசு என் செய்யும்
களை வளர்த்து குற்றம் பேணி,
ஊழல் பயிர் செய்து,
கொள்ளை அறுவடையாக்கி,
வன்புணர்வுக்கும், கொலைக்கும்
வாளாது இருந்து,
காப்பவர் எனும் கடமையின்
கழுத்து அறுக்கும்!

இது நம் நாடு!
நாம்தானே அதன் புதல்வர்?

– நாஞ்சில் நாடன்

# நாடாளுமன்ற தேர்தலும் ஒன்றிய (பி.ஜே.பி) அரசும்

2024ல் நடந்த 18வது நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் அரசு ஊழியர், ஆசிரியர்களின் ஏகோபித்த ஆதரவு காரணமாக பெரும்பான்மை பலத்துடன் வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட இந்தியா கூட்டணிக்கு கணிசமான இடங்களை அளித்துள்ளனர். தேர்தலில் முன்வைத்தப்படி மதச்சார்பற்ற ஜனநாயகத்தையும் அதன் அடித்தளமாக விளங்கும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தையும் உறுதியாக பாதுகாக்கும் விதத்தில் தமிழக மக்கள் தீர்மானித்துள்ளனர்.

**அயோத்தி கோவில் திறப்பு விழா**

மதச்சார்பின்னை என்பது ஓர் அரசியல் கோட்பாடு. அரசியலின் சுற்றுப்பாதையில் இருந்து மதத்தை விலக்கி வைக்க வேண்டும் என்பதே அதன் பொருள் என கொலம்பியா பல்கலைக்கழக பேராசிரியர் கூறுகிறார். ஆனால் ஒன்றிய அரசோ இக்கோட்பாட்டிற்கு நேர்விரோதமாக இயங்கி வருகிறது. இந்திய அரசியல் சட்டத்தினுடைய முக்கியமான விழுமியங்களில் ஒன்றான மதச்சார்பின்னையை அழித்திடும் முயற்சியில் பி.ஜே.பி. தலைமையிலான ஒன்றிய அரசு செயல்படுகிறது. இப்பின்னணியில் இடதுசாரிகள் மதச்சார்பின்மையை பாதுகாக்க வேண்டுமென உரத்து குரல் எழுப்பி வருகிறது.

அயோத்தியில் ராமல் கோயில் திறப்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு அறக்கட்டளையின் சார்பில் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. எதற்காக இந்த முயற்சி. ராமர் கோவில் திறப்பு விழாவில் ஒரு கட்சி கலந்து கொள்ளவில்லை என்றால் அக்கட்சி இந்துக்களுக்கு விரோதமானது என மக்கள் மத்தியில் அவதூறு பரப்பி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அரசியல் ஆதாயம் பெறுவதற்காக பி.ஜே.பி. கடைபிடிக்கும் மலிவான உத்தி இது.

30.12.2023 அன்று அயோத்தியில் பிரதமர் மோடி பேசும்போது 'வளர்ச்சியடைந்த இந்தியா என்ற முழக்கத்திற்கு அயோத்தி புதிய உத்வேகத்தை அளிக்கிறது' என்றார். சங் பரிவார் கும்பலால் திட்டமிட்டு பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் கோவில் கட்டுவது தான் இந்திய வளர்ச்சிக்கு அளவு கோலா? விலைவாசி உயர்வு, வேலையின்மை, ஊழல், ஜனநாயக உரிமை பறிப்பு என மோடி ஆட்சியின் பத்தாண்டு காலத்தில் இந்தியாவை படுபாதாளத்திற்கு தள்ளியது. இதை மூடி மறைப்பதற்காகத்தான் அயோத்தி கோவிலை குறுகிய அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்தியது ஒன்றிய மோடி அரசு.

இவ்வாறு இருக்க, மதச்சார்பின்னையை பற்றிய பண்டித நேரு பிரதமாராக இருந்த போது குஜராத்திலுள்ள கேதார்நாத் கோவில் விழாவிற்கு அழைக்கப்பட்டபோது ஒன்றிய அரசு இந்த கோவிலுக்கு நிதியும் தராமல் விழாவில் பங்கேற்கவும் செய்யாது என்ற நிலைபாட்டை மேற்கொண்டார். குடியரசு தலைவராக இருந்த ராஜேந்திரபிரசாத் அந்த கோவிலுக்குச் செல்வது பொருத்தமற்றது என்றார்.

தற்போது அயோத்தி ராமர் கோவில் துவக்க விழாவில் நாட்டின் பிரதமரும், உத்திரபிரதேச மாநில முதலமைச்சரும் கலந்து கொள்வது அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படை அம்சங்களுக்கு முரணானதும், உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு முரணானது ஆகும்.

**தேர்தல் ஆணையாளர்கள் தேர்வு**

தலைமைத் தேர்தல் ஆணையளாரை தேர்வு செய்யும் குழுவில் இருந்து உச்ச நீதிமன்ற நீதிபதியை நீக்கி இந்திய ஜனநாயகத்தை உறுதி செய்யும் ஒரு முறையில் இருந்து உச்சநீதிமன்றத்தின் பங்கு இல்லாமல் செய்துள்ளது பி.ஜே.பி ஆளும் கட்சியால் நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளர்கள் பி.ஜே.பி.யை தோல்வி அடைய விடுவார்களா? என்பதே சந்தேகம் உள்ளது. ஏனெனில் தேர்தல் ஆணையத்தின் ஒரு நிலை தலைமை கேள்விக்குறியாகி வருகிறது. இது கவலைக்குரிய விஷயமாகும்.

தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டிருக்கிற பகுத்தறிவற்ற தேவையில்லாத நீண்ட தேர்தல் அட்டவணை கூட ஆளுங்கட்சிக்கு சாதகமாகவும், அதன் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவும் அமைந்தது. மேலும் பி.ஜே.பி. அரசின் தனது முதன்மைப் போட்டியாளராக உள்ள காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கியது, நாட்டின் வரலாற்றிலேயே முதல் முறையாக ஆட்சியில் உள்ள முதல்வர்களை கைது செய்து தேர்தல் பிரச்சாரத்தில் அவர்கள் ஈடுபடுவதைத் தடுத்து எதிர்கட்சிகளை முடக்கியது.

தேர்தல் நடைமுறையே கேள்விக்குறியானது. மேலும் தனது வேட்பாளர்களை எந்த போட்டியுமின்றி தேர்வு செய்ய நியாயமற்ற முறையிலும், தன்னுடைய அதிகார வலிமையை பயன்படுத்தியது ஒன்றிய அரசு. அதாவது எதிர்கட்சிகளின் வேட்பாளர்களின் வேட்பு மனு செல்லாது என அறிவிக்கச் செய்தது, சுயேட்சை வேட்பாளர்கள் வாபஸ் பெற மிரட்டல்கள் விடப்பட்டன, சில இடங்களில் வேட்புமனு தாக்கல் செய்ய அனுமதிககப்படவில்லை.

தேர்தல் நெருங்கியபோது அரசு மேடைகளிலேயே நான் மீண்டும் ஆட்சிக்கு வருவேன் என அறிவிப்பு செய்ய துவங்கினார். பிரதமர் நாடாளுமன்ற உரையாற்றும்போது கூட நான் மீண்டும் ஆட்சிக்கு வருவேன் எனவும் 400 இடங்களில் வெற்றி பெறும் என பிரகடனப்படுத்தி கொண்டு இருந்தார்.

தேர்தல் பத்திர ஊழல், தேர்தல் பத்திரங்கள் மூலம் பி.ஜே.பி. கார்ப்பரேட் நிறுவனங்களிடம் வாங்கிய பண விவரங்களை பொது வெளியில் வருவதை தடுக்க ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள் எப்படி தீவிர முயற்சி செய்தார்கள் என்பதை நாம் பார்த்தோம். இந்திய தேர்தல் ஆணையத்திற்கும் பாரத ஸ்டேட் வங்கிக்கும் உச்சநீதி மன்றம் அழுத்தம் கொடுத்துதான் தேர்தல் பத்திர விபரங்கள் வெளியே வந்துள்ளன. அதேபோல் மோடி அரசால் மறைத்து வைக்கப்பட்ட பி.எம். கேர்ஸ் நிதி குறித்த விபரங்கள் மற்றும் ரபேல் ஊழல் விவகாரம் எதிர்கட்சியினர், பத்திரிகையாளர்களை வேவு பார்க்க பெகசாஸ் மென்பொருள் பயன்படுத்தியது, தற்பொழுது வரை பெகசாஸ் வழக்கில் பி.ஜே.பி. அரசிடமிருந்து எந்த தகவலையும் நம் உச்ச நீதி மன்றத்தல் பெற முடியவில்லை.

இவை மட்டுமல்ல. புலனாய்வுப் பத்திரிகையாளர்களால் சமீபத்தில் வெளியிடப்பட்ட செய்தி ஒன்று கடந்த 10 ஆண்டுகளில் பி.ஜே.பி. நன்கொடையாக பெற்ற தொகைக்கும், செலவு செய்த தொகைக்கும் ரூ.60 ஆயிரம் கோடி இடைவெளி உள்ளது என அதிர்ச்சி தகவல் வெளியிட்டுள்ளன. இவ்வாறான விபரங்களை அரசியல் பொருளாதார நிபுணர் பரக்கலா பிரபாகர் அவர்கள் கூறியுள்ளார்.

அதேபோல் தான் ஒன்றிய அரசு கடும் எதிர்ப்புக்கு மத்தியில் குடியுரிமை சட்டத்தை மோடி தலைமையிலான பி.ஜே.பி. கூட்டணி அரசு 2019ஆம் ஆண்டு நிறைவேற்றி குடியரசு தலைவரின் ஒப்புதலை பெற்றது. இந்த சட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் பெரும் போராட்டங்கள் வெடித்தன.

எனவே இந்த சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விதிகள் ஆறு மாதங்களுக்குள் வெளியிடப்பட

வேண்டும் என்ற நாடாளுமன்ற் கால நீட்டிப்பு பெற வேண்டும். இதன் அடிப்படையில் 2020லிருந்த இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த கால நீட்டிப்புக்கோரி ஒன்றிய உள்துறை அமைச்சகம் அவகாசம் பெற்று வருகிறது.

இந்நிலையில் நாடாளுமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்கு முன்பு சட்டம் நிறைவேற்றப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்து இஸ்லாமியர்கள் புனித ரமலான் நோன்பை துவங்கும் நாளன்று இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அறிக்கை வெளியிடப்பட்டு சட்டம் சடைமுறைக்கு வந்து விட்டதாக மோடி அரசால் அறிவிக்கப்பட்டது. இதிலிருந்து ஒன்றிய பி.ஜே.பி. அரசு இஸ்லாமிய மக்களுக்கு எதிராக தொடர்ந்து ஈடுபட்டு கொண்டிருக்கிறது.

மேற்கண்ட விபரங்கள் மட்டுமல்ல. பி.ஜே.பி. கடந்த 10 ஆண்டு கால ஆட்சி பறி போய்விடும் என்ற பதற்றத்தால் பிரதமர் அவர்களும், ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்களும் நாடாளுமன்ற பிரச்சார களத்தில் முழுக்க முழுக்க மதவெறி பிரச்சார களமாக மாற்ற முயற்சித்து வந்தார்கள்.

இதன் பின்னணியில் இருப்பது பிரதமர் மோடிதான். முதலில் முஸ்லீம்கள் மீது ஊடுருவல்காரரர்கள் அதிகம் பிள்ளை பெறுபவர்கள், இந்துக்களின் சொத்துகளை, பெண்களின் தாலி உட்பட பறித்து அவர்களுக்கு காங்கிரஸ் தந்துவிடும் என்று வெறுப்பை விஷமாகக் கக்கினார். இப்போது மூன்றாம் கட்ட தேர்தல்களுக்காக முஸ்லீம் மக்களை பகடைக் காயாக காங்கிரசும், இந்தியா கூட்டணியும் பயன்படுத்துகின்றன. அதனால் பி.ஜே.பி.யை நோக்கி முஸ்லீம்கள் வருகிறார்கள் என்று பிளேட்டை திருப்பி போட்டார் பிரதமர் மோடி.

சாதிவாரி கணக்கெடுப்பை ஏற்றுக்கொள்ளாத பி.ஜே.பி. மறுபுறத்தில் இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் பட்டியலின மற்றும் பழங்குடி மக்களின் இடஒதுக்கீட்டை பறித்து இஸ்லாமியர்களுக்கு கொடுத்து விடுவார்கள் என்று ஆதாரமின்றி அவதூறு பேசினார்கள். மறுபுறத்தில் பிரதமர் பொருளாதார ஆலோசனைக்குழு இந்துக்களின் எண்ணிக்கை இந்தியாவில் குறைந்து வருவதாக இஸ்லாமியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் பொய்யான புள்ளி விபரங்களை வெளிப்படுத்தியது.

இந்துக்களின் வாக்குகளை குறி வைத்தே ராமர் கோவிலைக் கட்ட எதிர்கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன என்று கூறினார் மோடி. இப்பொழுது உத்தரபிரதேசத்தில் கூட அது பயன்படாது என்று கருதி உ.பி. முதல்வர் ஆதித்யநாத் எனக்கும் மோடிக்கும் குழந்தைகள் இல்லை. உங்களுக்குத்தான் பாடுபடுகிறோம் என்று பேசியிருக்கிறார்.

இவர்களின் இதயம் துடிப்பது அம்பானி, அதானிக்கும்தான் என்பது நன்றாகத் தெரிந்ததே. இதை நாடறியும், உலகறியும். ஹிண்டன்பர்க் அறிக்கை வந்தபோது நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகளை பேச விடாமல் செய்தது யாருடைய குழந்தைகளுக்காக பணியாற்றுகின்றனர் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

அரசு குடும்பங்களின் வாரிசுகள் மட்டுமே பிரதமராக முடியும் என்ற தீய வழக்கத்தை தேநீர் வியாபாரியான நான் முறியடித்துவிட்டேன் என்று தனக்குத்தானே பாராட்டி கொண்ட மோடி அவர்கள் இன்னும் கூடுதலாக அவர் கூறியது நான் இருக்கிறேனோ இல்லையோ. இந்த நாடு நிலைத்திருக்கும் என்கிறார். இதுமட்டுமின்றி ஆயிரம் ஆண்டுக்கால அடித்தளம் அமைத்து வருவதாக கூறுகிறார்.

மேற்கண்ட விபரங்கள் பத்திரிகைகளில் வெளிவந்த நாடாளுமன்ற பரப்புரையில் (பி. ஜே.பி.) ஒன்றிய அரசின் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் ஆட்சி அதிகாரத்தில் வருவதற்கு பேசியது இன்றைக்கு மக்களின் தீர்ப்பு, தேச நலனை முன் நிறுத்துகின்றனர்.

ஆம் தோழர்களே, கடந்த 10 ஆண்டு கால பி.ஜே.பி. ஆட்சியில் வீழ்த்தவே முடியாத சக்தி வாய்ந்த நபர் என்ற பிம்பத்தோடு மத்தியில் அதிகாரம் செலுத்தி வந்த பிரதமர்

மோடியும் அவரது பாரதிய ஜனதாக கட்சியும் 18வது நாடாளுமன்ற தேர்தலில் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளனர். 2014, 2019 ஆகிய தேர்தல்களில் பெற்ற பெரும்பான்மையை இந்த தேர்தலில் பி.ஜே.பி. இழந்திருக்கிறது. இத்தேர்தலில் 400க்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெற்ற மிகமிக பெரும்பான்மையான தனி பெரும்பான்மையுடன் 3வது முறையாக ஆட்சி அமைப்போம் என்று முழங்கி வந்த மோடியின் கனவு நொருங்கியுள்ளது. கடைசி கட்டத்திலும், தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்பு என்ற பெயரில் மோடி ஆதரவு ஊடகங்கள் நடத்திய கருத்து திணிப்பையும் மக்கள் புறந்தள்ளியுள்ளனர்.

18வது நாடாளுமன்றத் தேர்தலினை முழுக்க முழுக்க எதிர்கட்சிகளின் மீதான ஆளும் ஒன்றிய அரசின் இடைவிடாத தாக்குதல்கள், ஒன்றிய அரசின் விசாரணை முகமைகள் மூலம் ஏவப்பட்ட மிக மோசமான அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அளவில்லாத பணபலத்தின் பயன்பாடு என்ற முறையில் நடந்து முடிந்தது. தேர்தல் ஆணையர் ஒரு துளி அளவிற்கு கூட ஆளும் பி.ஜே.பி. யின் அப்பட்டமான தேர்தல் நடத்தை விதி மீறல்களை கண்டுகொள்ளவில்லை.

இருப்பினும் இத்தகைய நிலையிலும் கூட எதிர்கட்சிகளின் மாபெரும் அணி வகுப்பில் இந்தியா கூட்டணி கௌரவமான எண்ணிக்கையிலான தொகுதிகளை பெற்றிருப்பதின் மூலம் இந்தியாவின் பிரம்மாண்டமான ஜனநாயகம் சரியான முடிவைத்தான் எடுத்திருக்கிறது. பி.ஜே. பி.யின் தனிப்பெரும்பான்மையை தகர்த்து நொறுக்கும் விதத்தில் மிகுந்த பாராட்டுதலுக்கு உரிய முறையில் தனது செயல் திறனை வெளிப்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல, ஜனநாயகத்தில் எஜமானர்களான வாக்காளர்கள் பி.ஜே.பிக்கு சொல்லும் செய்தி. இரண்டு முறை ஆட்சியில் இருந்தபோது என்னவெல்லாம் முடிவு எடுத்து செயல்படுத்தினீர்களோ அந்த செயல்பாடுகளை தட்டிக் கேட்க எதிர்கட்சிகளே இல்லை என்கிற நிலை ஜனநாயகத்துக்கு ஆபத்து என்பதால் கூட்டணி ஆட்சி அமைத்து கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன்தான் இனிமேல் இணைந்து பெரும்பான்மை நிரூபிக்க முடியும் என்பதையும், வலுவான எதிர்கட்சிகள் இருக்கும் போதுதான் ஜனநாயகம் ஆரோக்கியமாகத் தலைக்க முடியும் என்பதை உணர்ந்த நல்ல தீர்ப்பை மக்கள் தந்து இருக்கிறார்கள்.

பி.ஜே.பி. முழுக்க முழுக்க மதவெறியை உமிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் இடதுசாரிகள் உள்ளிட்ட இந்தியா கூட்டணி வேலையின்மை, விலைவாசி உயர்வு, விவசாய நெருக்கடி உள்ளிட்ட மக்கள் பிரச்சினைகளையும், ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்புச் சட்டம் ஆகியவற்றின் மீதான தாக்குதல்களையும் பி.ஜே.பி. தொடர்ந்து கடைபிடித்ததை பிரச்சாரத்தில் கூறினார்கள். அநேகமாக இந்திய நாடு முழுவதும் மக்களின் மனசாட்சியை தட்டி எழுப்பியது என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

எனவே, பி.ஜே.பி. தலைமையிலான கூட்டணி 290 இடங்களை பெற்றுள்ள நிலையில் இனிமேல் அரசியல் ஆதாயம் கருதி விசாரணை அமைப்புகளை பயன்படுத்துதல், விமர்சனங்களை புறந்தள்ளி அதிரடி முடிவுகளை எடுத்தல், மதவெறுப்பைத் தூண்டும் அரசியலை முன்னெடுத்தல் போன்ற எதிர்வினை அணுகுமுறைகளை பி.ஜே.பி. கைவிட வேண்டும் எனவும், எதேச்சதிகாரத்திற்கு எதிரான குரல் நாடாளுமன்றத்தில் இனிமேல் வலுவாக ஒலிக்கும் என தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தியுள்ளது. மேலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் அதை உயர்த்தி பிடிக்கும் மதச்சார்பற்ற ஜனநாயக குடியரசு எனும் உயரிய விழுமியங்களை பாதுகாப்பதற்காகவும், மக்கள் நலன்களை முன்னிறுத்துவதற்காகவும் முன்னெப்போதும் இல்லாத வகையில் அரசியல் மாறுபாடுகளை எல்லாம் கடந்து இந்திய நாட்டு மக்கள் இந்த நாடாளுமன்ற தேர்தலில் மிகபெரும் அரசியல் போரை நடத்தியுள்ளன. ●

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண் 237/84)

தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்

எண்.46, தேரடித்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005

28441286 / 28440938 e-mail : tngeastatecenter@gmail.com / web: www.tngea.org



மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**கோ.பழனியம்மாள்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**மு.செல்வராணி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

துணை பொதுச் செயலாளர்கள்
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**தெ.வாசுகி**
**வெ.சோமசுந்தரம்**

மாநிலச் செயலாளர்கள்
**சா.டானியல் ஜெயசிங்**
**உ.சுமதி**
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**சா.கோதண்டபாணி**
**அண்ணா.குபேரன்**


கடித எண்.12/2024 நாள்.23.05.2024

பெறுநர்

பொது மேலாளர்
யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
தலைமை அலுவலகம்
ஒயிட்ஸ் ரோடு
சென்னை-600014

ஐயா,

பொருள் : அரசு ஊழியர் புதிய நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் - கட்டணமில்லா சிகிச்சையை உறுதிப்படுத்த கோருதல் மற்றும் குறைகள் களைதல்- தொடர்பாக

பார்வை : 1. கடித எண்.10951/நிதி(சம்பளம்)/2016, நிதித்துறை, நாள்.15.02.2016
2. அரசாணை எண்.160/2021, நிதித்துறை, நாள்.29.06.2021

வணக்கம்.

தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் பெறுபவர்கள் பலன் பெறும் வகையில் முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை தமிழக அரசே நடத்த வேண்டும் என்ற அரசு ஊழியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று யுனை-டெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் நான்கு ஆண்டுகள் என்ற முறையில் கட்டணம் இல்லா சிகிச்சை வழங்க வேண்டும் என அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த திட்டத்தில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் போது ஏராளமான இடையூறுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு ஆணையில் உள்ளவாறு பயன் பெறும் வகையில் நடைமுறை சிக்கல்களை களைந்திட வேண்டும்.

1. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்ட நோயாளிகள் இடர்பாடின்றி சிகிச்சை பெற இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மருத்துவமனைக்கு சென்று நோயாளிகளை சந்திக்க ஆவன செய்ய வேண்டும்.

2. காப்பீடு பெறுவதற்கான முறையீட்டு அலுவலர்களை எங்கள் சங்க நிர்வாகிகள் தொடர்பு கொள்ளும்போது தடையின்றி பேசவும், சந்திக்கவும் ஆவண செய்ய வேண்டும்.

3. 2021 செப்டம்பர் மாதம் முதல் MDI, Medi Asst என்ற இரண்டு தனியார் நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2021 செப்டம்பருக்கு முன்பாக சிகிச்சை பெற்று, அந்த தொகையை வழங்க கேட்டு மனு செய்த பலருக்கும் இன்றும் உரிய பலன் கிடைக்காமல் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர். MDI மூலம் சிகிச்சைக்கான தொகை வழங்க உறுதிப்படுத்த வேண்டும்.

நன் மதிப்புடன்,
தங்கள் நம்பிக்கையுள்ள,

(மு. அன்பரசு)
மாநிலத் தலைவர்
செல்.9840187508

(ஆ. செல்வம்)
பொதுச் செயலாளர்
செல்.9443930500

# கட்டணமில்லா சிகிச்சையை உறுதிப்படுத்த காப்பீட்டு நிறுவனத்துடன் பேச்சுவார்தை



தமிழ்நாட்டில் அரசு ஊழியர்களுக்கான புதிய காப்பீடு திட்டத்தில் உள்ள குறைபாடுகளையும் நடைமுறை சிக்கல்களையும் களைந்து ஊழியர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சையை உறுதிபடுத்திட மதுரையில் இன்று (24.05.2024) மாலை 4மணிக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்துடன் யுனைட்டெடு இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி நிறுவனத்தின் பொதுமேலாளர், மண்டல மேலாளர், MD India மற்றும் Medi Asst நிறுவனங்களின் மேலாளர்கள் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பேச்சுவார்த்தையில் குறைகள் களையப்படும் என உறுதியளிதத்னர்.

இந்நிகழ்வில் பொதுச்செயலாளர் ஆ. செல்வம், மாநிலத்துணைத்தலைவர் மொ.ஞானத்தம்பி, திண்டுக்கல் மாவட்டத்தலைவர் S.முபாரக்அலி மாவட்டத்துணைத்தலைவர் ராஜமாணிக்கம், ஆத்தூர் வட்டக்கிளை பொருளாளர் ஜெ. சதீஷ்குமார், மதுரை மாவட்டத்துணைத்தலைவர் த.மனோகரன், மாவட்ட இணைச்செயலாளர் ஆ.பரமசிவன், வட்டக்கிளை நிர்வாகிகள் நிருவாகிகள் இரா.தமிழ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ●

கட்டுரை

# மோடியின் சர்வாதிகார வீழ்ச்சியும், தமிழகத்தில் பா.ஜ.க. வளர்ச்சியும்...

**- மு.பாஸ்கரன்**

**இந்திய ஜனநாயகம் வென்றது**

மக்களவை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 400 இடங்களுக்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும் என்று பாஜக தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்து வந்த நிலையில் பாஜக தனித்து 240 தொகுதிகளிலும் அதன் தலைமையிலான கூட்டணி 292 இடங்களில் மட்டுமே பெற்றதும் ஆட்சி அமைக்க குறைந்த பட்சம் 272 தொகுதிகள் தேவை என்ற நிலையையும் அடையாதது என்பது மோடியின் செல்வாக்கு சரிவை காட்டுகிறது மத்தியில் ஆளும் பா.ஜ.க. தனி பெரும்பான்மையை பெறாத நிலையிலும் அதிக தொகுதிகளில் வெற்றி பெற்று தனிப்பெரும் கட்சி என்ற நிலையை எட்டியுள்ளதால் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளுடன் கை கோர்த்து மத்தியில் கூட்டணி ஆட்சி அமைக்கும் நிலை பா.ஜ.க.-வுக்கு உருவாகியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத வகையில் மத்தியில் கூட்டணி ஆட்சியை அமைக்கும் நிலையில் மீண்டும் பிரதமர் மோடியே பிரதமராக பதவி ஏற்கவுள்ள நிலையில் தொடர்ந்து மூன்று முறை பிரதமரான முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் சாதனையை பிரதமர் மோடி சமர் செய்கிறார்.

கடந்த 2019 மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கட்சி 52 இடங்களிலும் 2014 ஆண்டு தேர்தலில் 44 இடங்களிலும் வெற்றி பெற்ற நிலையில் இம்முறை 99 இடங்களில் வெற்றி பெற்று காங்கிரஸ் தலைமையிலான இந்தியா கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றியை உறுதி செய்துள்ளது. குறிப்பாக ஹிந்தி பேசும் மாநிலங்களில் இந்தியா கூட்டணி கணிசமான வெற்றியை பெற்றுள்ளது. குறிப்பாக உத்திரபிரதேசத்தில் இந்தியா கூட்டணிக்கு அதிக இடங்கள் கிடைத்துள்ளது. இந்த வெற்றி இந்திய ஜனநாயகத்திற்கு வலு சேர்ப்பதாகவும் அரசியல் நீதியில் முக்கியத்துவம் வாய்ந்தாகவும் கருதப்படுகிறது

இனிமேலாளவது நாடளுமன்றத்தில் முறையாக விவாதங்கள் நடைபெற்று மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கபடும் என்று எதிர்பார்க்கலாம் முந்தைய மக்களவை போல விவாதமே இல்லாமலே மசோதாக்களை கட்சி நிறைவேற்றிக்கொள்ளும் போக்கும் பன்முகத்தன்மையை அகற்றி ஒரே தேசம், ஒரே மொழி, ஒரே காலாச்சாரமென்ற மோடியின் கூற்றை புறந்தள்ளி மக்கள் தெளிவாக வாக்களித்து மோடியின் சர்வாதிகார பயணத்திற்கும் முற்று புள்ளி வைத்துள்ளதும், இதன் மூலம் இந்திய ஜனநாயகம் வென்றுள்ளது.

**அயோத்தியில் பா.ஜ.க.நிலை**

உத்திரபிரதேசத்தில் அயோத்தி ராமர் கோயிலை உள்ளடக்கிய ஃபைசாபாத் மக்களவை தொகுதியில் பா.ஜ.க. தோல்வியடைந்துள்ளது. அந்த கோயிலை முன்வைத்து தீவிர தேர்தல் பரப்புரையை பா.ஜ.க. மேற்கொண்ட நிலையில் அக்கட்சிக்கு கைகொடுக்கவில்லை. மதரீதியான பிரச்சாரம் வாக்காளர்கள் மத்தியில் எடுபடவில்லை என்பதும் உத்திரபிரதேசத்தில் சமாஜ்வாதி பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியலினத்தவர் சிறுபான்மையினரை முன்வைத்து அகிலேஷ் மேற்கொண்ட பரப்புரை சமாஜ்வாதிக்கு கைகொடுத்துள்ளது. மேலும் முஸ்லீம்கள் வலுவாக ஆதரவு அளித்துள்ளதையும் தேர்தல் முடிவுகள் தெளிவாக காட்டுகிறது.

**தமிழகத்தில் பா.ஜ.க. வளர்ச்சி.**

குறிப்பாக சென்னை எப்போதும் தி.மு.க.-விற்கு சாதகமாக இருக்கும் என கருதப்படும் மத்திய சென்னை மற்றும் தென் சென்னை ஆகிய இரு தொகுதிகள் உட்பட 11 தொகுதிகளில் பா.ஜ.க. இரண்டாம் இடத்தையும் 22 தொகுதிகளில் மூன்றாம் இடத்தையும் பிடித்திருப்பதும், கடந்த 2019 பாராளுமன்ற தேர்தலில் 3.7 சதவீதம் வாக்குகள் பெற்றதும் 2024 தேர்தலில் 79,73,801 வாக்குகளை பெற்று 18.28 சதவீதமாக தமிழகத்தில் பா.ஜ.க. செல்வாக்கை அதிகரித்திருப்பதும் தமிழகத்திற்கு மிகப்பெரிய ஆபத்தை விளைவிக்கும் என்பதால் தமிழக மக்கள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்பதே தமிழகத்தை பொறுத்த வரையில் பாராளுமன்ற தேர்தல் உணர்த்தும் பாடம். ●

# திருச்சி மாவட்ட அமைப்புதின கருத்தரங்கம்



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 41 வது ஆண்டு அமைப்பு நாள் 06.05.2024 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 11 வட்டக்கிளைக்கு உட்பட்ட அலுவலகங்களில் கொடி ஏற்றி வைத்து கொண்டாடப்பட்டது.

திருச்சிராப்பள்ளி 2 வட்டக்கிளை நெடுஞ்சாலை துறை அலுவலகத்தில் மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி சங்கத்தின் கொடியையும், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியை மாவட்ட செயலாளர் பாபு, நெடுஞ்சாலை துறை சாலை பணியாளர்கள் சங்கத்தின் கொடியை தமிழ்நாடு நீதித்துறை ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் ரஞ்சித் குமார் ஏற்றி வைத்தார்கள்.

மாவட்ட மைய அலுவலகத்தில் மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் கொடி ஏற்றும் நிகழ்வில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.வி. சந்திரசேகர், அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியை முன்னாள் மாவட்ட தலைவர் தோழர் எம.சீராஜீதின் ஏற்றிவைத்தார்கள்.

மேலும் திருச்சி 1, திருச்சி 2, மணப்பாறை, முசிரி, மருங்காபுரி, இலால்குடி, திருவெறும்பூர் தொட்டியம் மற்றும் துறையூர் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட அலுவலகங்களில் கொடி ஏற்றி அமைப்பு தினம் கொண்டாடப்பட்டது.

மாவட்ட மையத்தில் அமைப்பு தினம் கருத்தரங்கம் மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பாபு வரவேற்புரையாற்றினார்.

மாநில துணைத் தலைவர் பெரியசாமி, மாவட்ட துணைத் தலைவர் ஜீவானந்தம், மாவட்ட பொருளாளர் சிவசங்கர் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

"சங்கத்தின் தோற்றம் வளர்ச்சி" குறித்து முன்னாள் மாநில துணைத் தலைவர் பி.வி. சந்திரசேகரும், "சங்கத்தின் கடந்த கால போராட்டங்கள்" குறித்து முன்னாள் மாவட்ட தலைவர்/ தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாவட்ட தலைவர் தோழர் சிராஜீதினும், "சங்கம் போராடி பெற்ற உரிமைகள்" குறித்து தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதிய சங்கத்தின் மாநில துணைத் தலைவர் எம்வி.செந்தமிழ் செல்வன் ஆகியோர் கருத்துரையாற்றினார்கள்.

முன்னாள் மாவட்ட செயலாளர் பழனிச்சாமி வாழ்த்துரை வழங்கினார். தோழர் செந்தில் குமார் நன்றி கூறினார். இதில் அனைத்து துறை ஊழியர்களும், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் ஓய்வூதிய சங்கத்தின் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். ●

# துறைத்தேர்வு பயிற்சி வகுப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்ட மையத்தின் சார்பில் மாவட்ட மைய அலுவலகமான தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லத்தில் அரசு ஊழியர்களுக்கு துறை தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்பினை மாவட்ட தலைவர் முனைவர் கா. பால் பாண்டி 19.05.2024 அன்று காலை துவங்கி வைத்தார். பயிற்சி வகுப்பினை தோழர் தங்கத்துரை நடத்தினார். இதில் திருச்சி அரியலூர், புதுக்கோட்டை, கரூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் இருந்து பல்வேறு துறை ஊழியர்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டார்கள். ●

# கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் – நாகப்பட்டினம்

நூறு ஆண்டுகளுக்கு மேலாக நாகப்பட்டினத்தில் இயங்கிவந்த மாவட்டத் தலைமை மருத்துவமனை, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்ற அரசின் முடிவின்படி, நாகப்பட்டினம் அருகில் ஒரத்தூர் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை செயல்பாட்டை ஒட்டி நாகப்பட்டினத்தில் இயங்கிவந்த மருத்துவமனையின் பெரும்பாலான மருத்துவப் பிரிவுகள் ஒரத்தூருக்கு மாற்றப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் ஒரத்தூரில் செயல்படும் மருத்துவக் கல்லூரி சென்றுவர சரியான போக்குவரத்து வசதிகள் இல்லை, இருப்பதாக சொல்லப்படும் சில பேருந்து வசதிகள் போதுமானதாக இல்லை என்பதோடு, ஒரத்தூர் வழியாக செல்லும் பேருந்துகள் நிறுத்தும் இடத்தில் இருந்து இரண்டு கிலோமீட்டர் அளவுக்கு நடந்து செல்ல வேண்டிய நிலை என்பது நோயாளிகள், ஊழியர்கள் உள்ளிட்டோருக்கு மிகுந்த சிரமத்தை உருவாக்குவதாகும். முழுமையான போக்குவரத்து வசதிகள் செய்து தர வேண்டும், முழுமையான தண்ணீர் வசதிகள் செய்து தர வேண்டும், மருத்துவர் மற்றும் ஊழியர்கள் காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும், வரும் வழியில் ஏற்பட சாத்தியமான திருட்டு, வழிப்பறி உள்ளிட்டவற்றை தடுக்கும் விதமாக ஒரத்தூர் மருத்துவக் கல்லூரி முதல் பாப்பா கோயில் வரை முழுமையான லைட் வசதி மற்றும் கண்காணிப்பு கேமரா வசதிகள் செய்து தர வேண்டும், நாகப்பட்டினம் சுற்று வட்டாரங்களில் வசிக்கும் மக்களின் பயன்பாட்டிற்காக தற்போதைய மருத்துவமனையிலேயே தஞ்சாவூர் இராஜாமிராசுதார் மருத்துவமனையில் செயல்படுவதைப்போன்று மகளிர் மற்றும் குழந்தைகள் நலப் பிரவு மற்றும் குறைந்த அளவு படுக்கை வசதியுடன் அவசர சிகிச்சை பிரவு நாகப்பட்டினம் மருத்துவமனை தொடர்ந்து செயல்பட வேண்டும் எனவும், அதேபோல் புற்றுநோய், காசநோய், தொழுநோய் உள்ளிட்ட சிறப்பு மருத்துவ சிகிச்சை பிரிவுகள் இதே வளாகத்தில் செயல்பட வேண்டும் எனவும், இயன்முறை சிகிச்சை மையம் மற்றும் இந்திய மருத்துவ பிரிவுகளில் வரும் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, இயற்கை முறை உள்ளிட்ட அனைத்து பிரிவுகளுக்கும் உள் நோயாளிகள் அனுமதிக்கப்பட்டு பயன்பெறும் வகையில் இந்த மருத்துவமனை வளாகம் செயல்பாட்டிற்கு வர வேண்டும், இருக்கின்ற மருத்துவமனையை இழந்துவிட்டோமோ என்று ஆதங்கத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அனைத்து பிரிவினரையும் அழைத்துப் பேசி முறையான அறிவிப்பை / ஆணையை தமிழ்நாடு அரசு வெளியிட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறோம் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று ( 14.05.24 ) மாலை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனை முனபு மாவட்டத் தலைவர் பா.ராணி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் விளக்கவுரையாற்றினார். கூட்டுறவுத்துறை ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் முத்துராஜா, சாலைப் பணியாளர்கள் சங்க மாவட்டத் தலைவர் கணேசன், ஊரக வளர்ச்சித்துறை அலுவலர் சங்க மாவட்டப் பொருளாளர் மீனாட்சி, அரசு செவிலியர் சங்கத் தலைவர் ப.ஜீவானந்தம், ஓய்வூதியர் சங்க மாவட்டப் பொருளாளர் எம்.பி.குணசேகரன், இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்டச் செயலாளர் தங்கமணி, மருத்துவத்துறை ஊழியர் சங்க முன்னாள் மாநில துணைத் தலைவர் ப.அசோகன், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் வே.சித்ரா, நகராட்சி மற்றும் மாநகராட்சி ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட பலர் வாழ்த்துரை வழங்கினர். ●

## சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வருடன் சந்திப்பு

சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வருடன் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் சந்திப்பு. சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் அடிப்படை ஊழியர்களின் குடியிருப்புகளுக்கு - கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட வாடகையினை முறைப்படுத்த வேண்டும் என அரசு ஊழியர் சங்கம் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. அக்கோரிக்கையினை நிறைவேற்றியமைக்காக, மருத்துவக் கல்லூரி முதல்வர் அவர்களைச் சந்தித்து - சங்க நிர்வாகிகள் நன்றி தெரிவித்தும், நினைவுப் பரிசு வழங்கிய நிகழ்வு. இந்நிகழ்வில், TNGEA மாவட்டத் தலைவர் தோழர். கண்ணதாசன், மாவட்ட துணைத் தலைவர் தோழர். மூவேந்தன், மாவட்ட இணைச் செயலாளர் தோழர். பயாஸ் அகமது, தமிழ்நாடு மருத்துவத்துறை நிர்வாக ஊழியர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் தோழர். விஜயகுமார், மாவட்ட செயலாளர் தோழர். மணிமாறன் மற்றும் TNGEA வட்டக்கிளைத் துணைத் தலைவர் தோழர். கலைச்செல்வம் உள்ளிட்ட நிர்வாசிகள் கலந்து கொண்டனர்.

## சேலம் மாவட்ட பயிற்சி வகுப்பு

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க சேலம் மாவட்டத்தின் சார்பில், சங்க நிர்வாகிகளுக்கும் முன்னணி ஊழியர்களுக்கும் கடந்த11.5.24 சனிக் கிழமை அன்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேட்டூர் சங்க கட்டிடத்தில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தமிழ்நாடு அரசுஊழியர் சங்கத்தின் சேலம்மாவட்ட செயலாளர் தோழர் பி சுரேஷ் வரவேற்புரை, மற்றும் பயிற்சி வகுப்பு நோக்கம் குறித்து பேசினார்

முதல் அமர்வு தோழர்மா. ராணி மாவட்ட துணைத்தலைவர் தலைமை தாங்கினார். "நுகர்வு கலாச்சாரமும் அரசு ஊழியர்களும்" என்ற தலைப்பில் தோழர் மூ. சீனிவாசன் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைப் பொதுச் செயலாளர் வகுப்பு எடுத்தார்.

இரண்டாம் அமர்வு தோழர். A. சண்முகம் மாவட்ட துணைத்தலைவர் தலைமை தாங்கினார், சங்கமும்,எதிர் கொள்ளும் சவால்களும் குறித்து தோழர் A.அம்சராஜ் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் வகுப்பு எடுத்தார். இறுதியாக மாவட்ட இணைச் செயலாளர் து.சிங்கராயன் நன்றியுரை ஆற்றினார். ●

## மதுரை மாவட்ட பயிற்சி வகுப்பு

மதுரை மாவட்ட மையத்தின் சார்பாக 18.05.2024 அன்று சனிக்கிழமை மாலை 3.00 மணியளவில் மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள சுனில் மைத்ரா ஹாலில் (LIC) மாவட்டத்தலைவர் ஜெ.மூர்த்தி தலைமையில் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. மாவட்டச்செயலாளர் க.நீதிராஜா வரவேற்புரையாற்றினார்: மாநிலபொதுச்செயலாளர் ஆ.செல்வம் தொடக்கவுரையாற்றினார். தீக்கதிர் ஆசிரியர் S.P.ராஜேந்திரன் “உலக அரசியலும் நமது கோரிக்கைகளும் என்ற தலைப்பில் உரையாற்றினார். மாவட்டப்பொருளாளர் க.சந்திரபோஸ் நன்றியுரையாற்றினார். ●

கவிதை

# கிழிந்து தொங்கக்கூடும் உன் முற்போக்கு கயமைத்தனங்கள்...

கிருஷ்ண பிரியா

எண்ணெய்ப் பிசுக்குப் பிடித்த
சமையலறை மேடையை
கழுவினாலென்னவென்று
புகார் சொல்கிறாய்...

கலைந்து கிடக்கும்
துணிகளையெல்லாம்
அடுக்குவதில்லை என்றொரு நாள்...

நாளொரு விதமாய்
நாவுக்கு ருசியாய்
புதுப் புது பதார்த்தம்
சமைக்கத் தெரியவில்லை...

அவளோ அல்லது இவளோ
எப்படி செய்கிறாள் என்ற
அதிசயிப்பு வேறு...

நிமிர்ந்து நிற்கையில்
மேடாய் தெரியும்
பிதுங்கிய வயிறை
கேலி செய்கிறாய்...

வெண்மை படரும்
தலைமயிர் கோதி
வயசாயிட்டென்று கண்சிமிட்டுகிறாய்...

அப்படி இப்படி பேசிக் கொஞ்சம்
வழிக்குக் கொண்டுவர
முயற்சி செய்கிறாய்...
புரியாமல் விழிக்கும்
என் அசட்டுத்தனத்தை
நண்பர்களுடன் கூடியிருக்கையில்
பேசுபொருளாக்குகிறாய்...

முட்டி மோதி நான்
வாசிக்கும் புத்தகங்களை
இது தானாவென
ஒற்றைப் பார்வையில்
கிழித்தெறிகிறாய்...

எழுதுகோலை
எடுத்துக் கொள்ளவே
வழியற்ற என்னை
எழுதுவதில்லையென
திட்டித் தீர்க்கிறாய்...

என்னை
முன்னெடுத்துச் செல்லவே
அத்தனை பாடுபடுவதாய்
உலகை நம்ப வைக்க
தொண்டை வறள
பேசியபடியிருக்கிறாய்...

கடமைகளின் சுமை
அழுத்தாத வாழ்வை
மதுக் கோப்பைகளின்
சியர்ஸ் ஒலியுடன்
வாசிப்பும் எழுத்தும் என
வாழ்ந்து தீர்க்கும்
உன் முன்னே
ஒரு நாள்
நான் நீட்டவிருக்கும்
என் சுயசரிதை பக்கங்களில்
கிழிந்து தொங்கக்கூடும்
உன் முற்போக்கு
கயமைத்தனங்கள்...

எதற்கும் கொஞ்சம்
கூடுதல் கவனமாக இரு
இந்த எதற்கும்
பயனில்லாத பெண்ணிடம்...

கட்டுரை

# அதானி–பாஜக கூட்டணியிடமிருந்து பொதுச் சொத்துக்களைக் காப்போம்!

**எஸ். கண்ணன்**

அதானி மீது தொடர்ந்து ஊழல் குற்றச்சாட்டு கள் வருகின்றன. இதுவரை இந்தியாவில் எந்த ஒரு இந்திய பெரு நிறுவனத்தின் மீதும் இல்லாத குற்றச்சாட்டு அதானி மீது மட்டும் ஏன் வருகிறது என்ற கேள்வி முக்கியமானது. எந்த ஒரு பெரு நிறுவனமும் 10 ஆண்டுகளில் மிகப்பெரும் சொத்துக்களுக்கு சொந்தக்காரராக வளரவில்லை என்ற உண்மையில் இருந்து, அதானி குரூப் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஊழலுக்கு அப்பாற்பட்ட நிறுவனம் அல்ல என்ற முடிவுக்கு வர முடியும்.

### அதானி சொத்துக் குவிப்பில் பொதுத் துறை நிறுவனங்கள் 819 % உயர்வு

முதலில் 2023 ஜனவரியில், ஹிண்டன்பர்க் ரிசர்ச் நிறுவனம் அதானி எப்படி பங்குச் சந்தை வர்த்தகத்தை முறைகேடாக பயன்படுத்தினார் என்பதை அம்பலப் படுத்தியது. அதானியின் சில குறிப்பிட்ட நிறுவனங் களின் பங்கு மதிப்பு 819 சதவீதம் திடீரென உயரும் வகையில் முறைகேடுகள் செய்யப்பட்டதை, ஹிண்டன்பர்க் ரிசர்ச் நிறுவனம் அம்பலப்படுத்தியது. பாரத ஸ்டேட் வங்கி, எல்.ஐ.சி ஆகிய நிறுவனங் களின் பெயரும் இதன் மூலம் பாதிப்புகளைச் சந்தித்தது. இந்த விவகாரத்தில், நாடாளுமன்ற உறுப்பி னர் மெஹுவா மொய்த்ரா தகுதி நீக்கம் செய்யப் பட்டார். பாஜக ஆட்சி, அந்த அளவிற்கு அதானி ஆதரவு நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாடாளு மன்ற உறுப்பினர்கள் பலர் இடைக்கால நீக்கம் செய்யப்படும் அளவிற்கு, நாடாளுமன்றத்தில் பாஜக உறுப்பினர்கள் அதீதமாக நடந்து கொண்டனர்.

### தேர்தல் பத்திரம்

இரண்டாவது, உச்சநீதிமன்றம் தேர்தல் பத்திரம் மூலம் நிதி பெறுவது, சட்டவிரோதம் என்றது. அதில் அதானி பெரிய அளவில் இடம் பெறாதது எப்படி என கேள்வி எழுப்பினர். ஆனால் அதானி நிறுவனத்தின் கிளை நிறுவனங்களான ABC இந்தியா, வெல்ஸ்பர்ன் லிவிங் லிமிடெட் ஆகியவை மூலம் ரூ.55.4 கோடி பாஜகவுக்கு தேர்தல் பத்திரம் வழங்கியதாக பாரத ஸ்டேட் வங்கி அளித்த விவரம் அம்பலப்படுத்தியது. பாஜகவுடன் அதானி நிறுவனம் நெருக்கமாக உள் ளது என்பதற்கு இது கூடுதல் உதாரணம் ஆகும்.

### துறைமுகங்கள்

மூன்றாவதாக, அதானி நிறுவனம் கோலோச்சும் துறை கப்பல் துறைமுகம் ஆகும். 355 மில்லியன் டன் (35.5 ஆயிரம் கோடி கிலோ) சரக்குகளை கையாளும் அளவிற்கு 8 பெரிய துறைமுகங்களை தன்வசம் கொண்டிருக்கிறது. மேற்கு கடற்கரையில், முந்த்ரா, டுனா, டாஹ்ஜ், ஹாஜிரா, திஹி, மோர்குவா மற்றும் விழிஞ்ஞும் என ஒன்றிய அரசிற்கு சொந்த மானதை விடவும் அதிக எண்ணிக்கையிலான துறை முகங்களை மேற்கு கடற்கரையில் அதானி உடைமை யாக்கிக் கொண்டுள்ளார். தமிழ்நாட்டில் காட்டுப்பள்ளி துறைமுகமும் அதானிக்கு சொந்தமானது ஆகும்.

### விமான நிலையங்கள்

10 ஜனவரி, 2024 நிலவரப்படி, மங்களூரு, லக்னோ, அகமதாபாத், கவுகாத்தி, ஜெய்ப்பூர், திருவனந்தபுரம் மற்றும் மும்பை ஆகிய 7 விமான நிலையங்கள் 100 சதமானம் அதானி கட்டுப்பாட்டிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டன. இந்த விமான நிலையங்கள் மூலமாக 80 மில்லியன் (8கோடி) பயணிகள் கடந் தாண்டு வந்து சென்றுள்ளனர். அதானி ஏர்போர்ட் ஹோல்டிங் லிமிடெட் என்ற பெயரில், அதானியின் மகன் ஜீத்

அதானியின் பொறுப்பில் இவை இயங்கி வருகின்றன. இந்தியாவின் 25 சதமான பயணிகளை யும், 33 சதமான கார்கோ (சரக்கு போக்குவரத்து) பணி களையும் அதானி ஏர்போர்ட் ஹோல்டிங் லிமிடெட் நிறுவனம் கையாண்டு வருகிறது. அடுத்து சென்னை விமான நிலையத்தை கைப்பற்றும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளது.

**எண்ணெய்**

அதானி நிறுவனமும், இந்தியாவின் மகாரத்னா நிறுவனம் என அழைக்கப்படும் இந்தியன் ஆயில் நிறுவனமும் இணைந்து, இந்தியன் ஆயில் அதானி கேஸ் பிரைவேட் லிட்., என்ற நிறுவனத்தை நடத்து கின்றனர். இந்தியாவின் 8 சதமான நுகர்வோர் இந்த நிறுவனத்தை சார்ந்து இருப்பதாக சொல்லப்படு கிறது. இது இல்லாமல் எண்ணெய் நிறுவனங்களும் செயல்படுகின்றன.

**நிலக்கரி சுரங்கம்**

அதானியின் நிலக்கரி சுரங்கங்கள் சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களிலும், இரும்புத் தாது சுரங்கம் ஒடிசா, மத்தியப்பிரதேசம் மாநிலங்களிலும் உள்ளது. ஏறத்தாழ அரசுக்கு இணை யாக சுரங்கத் தொழிலில் ஈடுபட்டு வரும் நிறுவனமாக அதானி நிறுவனம் உள்ளது. ஆஸ்திரேலியாவின் பெர்த் நகரிலும் நிலக்கரி சுரங்கம் அதானிக்கு இருக்கிறது.

**மின்சாரம்**

மின்சார உற்பத்தி, அதானியின் அடுத்த பெரிய தொழிலாகும். அதானிபவர் டாட் காம் இணைய தளம், 15,250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் தெர்மல் பவர் பிளாண்ட் (அனல் மின் நிலையம்) நடத்தி வருவதாக கூறுகிறது. குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா, ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்தியப்பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களின் மின் தேவை அதானியின் "சேவை" யில் சிக்கி இருப்பதை அறிய முடிகிறது. இதன் காரணமாகவே கார்ப்பரேட் - பாஜக அரசு கள்ளக் கூட்டணி என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ந்து விமர்சித்து வருகிறது. மொத்தத்தில் அதானியிடம் இல்லாத தொழில் இல்லை. அரசு படிப்படியாக தனது பொதுத்துறை நிறுவனங்களை கூட்டு அல்லது தனியார் மயம் என்ற பெயரில் இழந்து வருகிறது. அரசின் கைவசம் உள்ள போது சேவை நிறுவனங்களாகவும், தனியாரிடம் செல்லும் போது கொள்ளை நிறுவனங்களாகவும் மாறும் என்பதற்கு, பைனான்சியல் டைம்ஸ் அம்பலப் படுத்தியுள்ள, நிலக்கரி பேரம் குறித்த பல்லாயிரம் கோடி ரூபாய் ஊழல் மிகப் பெரிய உதாரணம் ஆகும்.

**அதானி – பாஜக – அதிமுக கூட்டணி**

மே 22 தூத்துக்குடியில், ஸ்டெர்லைட் என்ற வேதாந்தா கார்ப்பரேட் நிறுவனத்தை காப்பதற்காக, அதிமுக அரசு, துப்பாக்கிச்சூடு நடத்திய நாள். இந்தாண்டு அதே நாளில் லண்டனில் வெளியாகும் பைனான்சியல் டைம்ஸ் இதழ் அதானி – பாஜக மற்றும் அதிமுக கூட்டணியின் கூட்டுக் கொள்ளை குறித்த விவரங்களை வெளியிட்டு உள்ளது. அமெரிக்காவைச் சார்ந்த ஜார்ஜ் சோரஸ் முதலீட்டில் இயங்கும் ஆர்கனைஸ்டு கிரைம் அண்ட் கரப்சன் ரிப்போர்ட்டிங் புராஜக்ட் (ஓ.சி.சி.ஆர்.பி) என்ற அமைப்பு, ஏராளமான ஆவணங்களை வெளிப்படுத்தி, மேற்கண்ட ஊழலை அம்பலப்படுத்தியுள்ளது. 2014 ஜனவரி முதல் அக்டோபர் வரை 24 கப்பல்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரி, முதலில் தரம் குறைந்தது என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதன் பின் மூன்று மடங்கு விலையில் தமிழ்நாடு மின்சாரவாரியத்திற்கு விற்கப்பட்டுள்ளது. இது பாஜக ஆட்சி துவங்கிய காலம். அதன் பின் விலை நிர்ணயத்தில் மாற்றம் செய்யப்பட்டது என்றால், பாஜக அரசின் துணை இல்லாமல் எப்படி சாத்தியம்? பாஜக துணையுடன் அதிமுக இந்த கொள்ளைக்கு உடந்தையாக இல்லாமல் எப்படி, அதானி இவ்வளவு பெரிய மோசடிக்கு தமிழ்நாடு மின்வாரியத்தை பயன்படுத்தி இருக்க முடியும்? டான்ஜெட்கோ என்ற தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனத்தை ஆஸ்திரேலிய நிலக்கரி அடையும் முன், கப்பலுக்கான ஆவணங்கள் சுப்ரீம் யூனியன் இன்வெஸ்ட்ரஸ் லிமிடெட் என்ற இடைத்தரகர்

நிறுவனம் மூலம் வரி தளர்வுகள் அதிகம் கொண்ட பிரிட்டிஷ் வெர்ஜின் தீவுகளில் பதிவு செய்யப்பட்டதாக ஓ.சி.சி.ஆர்.பி என்ற அமைப்பு வெளிப்படுத்துகிறது. முற்றிலும் அதானி செய்த மோசடி குறித்த விவரங்களாக இந்த புலனாய்வு அமைந்திருப்பதை கணக்கில் கொள்ள வேண்டும். சுமார் 7 ஆண்டுகள் இந்த கொள்ளைப் பயணத்தை அதானி, பாஜக, அதிமுக கூட்டணி நடத்தி இருக்கிறது. விலை அதிகம் மட்டுமல்ல, அந்த நிலக்கரியின் தரமும் செல்லுபடி ஆகக் கூடியதல்ல. இந்தோனே சியாவில் உள்ள ஜான்லின் சுரங்க குழும நிறுவனத்தி டம் பெற்ற நிலக்கரியின் எரிதிறன் கிலோவுக்கு 3000 கலோரி தான். இதை இந்தியாவுக்கு விற்க அதானி இடைத்தரகராக இருந்து செயல்பட முடிவாகியுள்ளது. இதன் விலை 86 டாலர் என தீர்மானித்துள்ளனர். இதை தமிழ்நாடு மின்வாரியம் ஒப்பந்தம் செய்து கொண்ட பின் தான், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் விலை அதிகம் கொடுத்து வாங்கியுள்ளது. ஆனால் கிலோவுக்கு 6000 கலோரி எரிதிறன் கொண்ட நிலக்கரியே இறக்குமதிச் செலவுகள் உள்பட 81 டாலருக்கு கிடைக்கிறது.

**ரூ.10 ஆயிரம் கோடி வரை மோசடி**

விலை மிக அதிகம் என்று தெரிந்த பின்னரும் ஒன்றிய பாஜக அரசும், அதிமுக அரசும் இதற்கு உடந்தை என்ற காரணத்தால் தான், அதானியின் மேற்படி கொள்ளை தடுக்கப் படவில்லை. 2016ஆம் ஆண்டில் ஒன்றிய அரசின் நிதி அமைச்சர்களாக அருண் ஜெட்லி மற்றும் ஜெயந்த் சின்ஹா இருந்துள் ளனர். தமிழ்நாடு மின்வாரிய துறை அமைச்சராக பி. தங்கமணி இருந்துள்ளார். தரம் குறைவான நிலக்கரி யை அதிக விலை கொடுத்து இறக்குமதி செய்யும் பணி துவங்கிய காலத்தில் அமைச்சராக, நத்தம் விஸ்வ நாதன் இருந்துள்ளார். இந்த பேரத்தில் மட்டும் ரூபாய் 6000 கோடி முதல் 10 ஆயிரம் கோடி வரை, மோசடி செய்யப்பட்ட தாகவும் ஓ.சி.சி.ஆர்.பி நிறுவனம் கூறுகிறது. இந்த மோசடி நுகர்வோரின் மீது, கட்டண உயர்வு செய்ய வும், மின்வாரிய ஊழியர்களின் நலன் காக்கும் திட்டங் களை கைவிட்டு, ஒப்பந்த ஊழியர்கள் மூலம், உழைப்புச் சுரண்டலை அதிகப்படுத்தவும் இட்டுச் சென்றுள்ளது.

**மனித உயிர்களைக் காவு வாங்கும் ஊழல்**

அதேபோல் சுற்றுச்சூழல் மாசு அதிகரிக்கவும் இந்த தரம் குறைவான நிலக்கரி இறக்குமதி காரணமாகி யுள்ளது. 2022ஆம் ஆண்டில் தி லான்செட் என்ற மருத்துவ ஆய்விதழ் நடத்திய ஆய்வு, ஒவ்வொரு ஆண்டும், காற்று மாசு காரணமாக இந்தியாவில் 20 லட்சம் மக்கள் உயிரிழக்கின்றனர் என்ற அதிர்ச்சிகர மான செய்தியை வெளியிட்டுள்ளது. அனல் மின் நிலை யங்களை சுற்றி 100 மைல் சுற்றளவிற்கு குழந்தைகள் இறப்பு அதிகரிப்பதாகவும் கூறப்படுகிறது. தரமற்ற நிலக்கரியால் மனித இழப்பும், பொருள் இழப்பும், அதானி – பாஜக- அதிமுக கஜானாக்களை நிரப்பி இருப்பது உண்மை.

**தேவை பெரும் போராட்டங்கள்**

இந்தியாவிலும், உலக அனுபவத்திலும், நவ தாராளமயக் கொள்கை அமலான 1990களுக்கு முன் ஊழல் குற்றச் சாட்டுகளுக்கு எதிரான போராட்டங் கள் தீவிரமாக இருந்தன. தாராளமயக் கொள்கைகள் அமலாக துவங்கிய பின், அம்பலமாகும் ஊழல்கள் மீதான எதிர்ப்பு இயக்கங்கள் குறைந்து வருகிறது. போபர்ஸ் எதிர்ப்பு, முந்த்ரா எதிர்ப்பு உள்ளிட்டவை வரலாற்றில் மிக முக்கியமான ஆட்சி மாற்றங்களுக்கு காரணமாக இருந்த போராட்டங்கள். பொதுமக்களும், வாலிபர், மாணவர் அமைப்பினர் பெரும் போராட்டங்களை நடத்தினர். பாஜக ஆட்சிக்கு வந்த பின், ரபேல் ஊழல், அதானி நிறுவனங்கள் செய்துள்ள வகை வகையான ஊழல்கள் ஆகியவை கார்ப்பரேட் பெரும் நிறுவனங்கள் வழிநடத்தும் ஊடகங்களால் மறைக்கப்பட்டு திசை திருப்பப்படுகின்றன. உண்மை யை வெளிப்படுத்தும் ஊடகங்கள் பாஜகவினால் அச்சுறுத்தப்படுவதும், கைப்பற்றப் படுவதும் அதி கரித்தது. எனவே அதானி நிறுவனத்தின் கொள்ளை யை, அதற்கு உடந்தையாக இருந்த பாஜக மற்றும் அதிமுகவை அம்பலப்படுத்தவும், பொதுச் சொத்துக்களை, பொதுத் துறை நிறுவனங்களை காக்கவும் தீவிர போராட்டங்கள் அவசியம். ●

# ஆர்எஸ்எஸ் நபரின் தலைமைக்கு எதிராக போராடிய மாணவி

## நமது நிருபர்

பாயல் கபாடியா இயக்கிய “ஆல் வி இமேஜின் அஸ் லைட்” என்ற இந்திய திரைப்படம் கேன்ஸ் திரைப்பட விழாவில் லீ கிராண்ட் பிக்ஸ் விருதை வென்று செய்திகளில் இடம்பிடித்துள்ளது. நாடு முழுவதும் பெருமை கொள்ளும் தருணம் இது. இந்திய திரைப்பட உலகம் உச்சத்தைத் தொட்ட நாள். இதையொட்டி தற்போது அதிகம் பேசப்படும் பெயர்களில் ஒன்றாக இயக்குநர் பாயல் கபாடியா மாறியுள்ளார்.

போராட்டத் தலைவியுமான பாயல் கபாடியாவை அறிந்தால் தான் அவரது நெருக்கடிகள் நிறைந்த திரையுலக வாழ்க்கை இன்னும் தெளிவாகும். பாயல் கபாடியாவுக்குத் தகுதியான அங்கீகாரம் கிடைத்தாலும், 2015இல் மோடி அரசு, ஆர்எஸ்எஸ் ஆதரவு நபரான கஜேந்திர சவுகானை இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தின் (FTII) தலை வராக நியமித்ததற்கு எதிராக மிகப் பெரிய போராட்டத்திற்கு அவர் தலைமை தாங்கினார் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**பாயல் கபாடியா யார்?**

மும்பையில் உள்ள கலைஞர் நளினி மாலினியின் மகள் பாயல் கபாடியா. ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ரிஷி வேலி பள்ளியில் தனது ஆரம்பக் கல்வியை முடித்தார். தில்லி பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள செயின்ட் ஸ்டீபன் கல்லூரியில் அவர் பொருளாதாரத்தில் பட்டம் பெற்ற பிறகு, திரைப்படம் குறித்து படிக்க புனே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்தில் சேர்ந்தார். நாட்டின் அரசியல் மற்றும் கலை ரீதியாக புனே எப்ஐடிடியை மிகவும் சுறுசுறுப்பான வளாகங்களில் ஒன்றாக்கியதில் பாயலின் மாணவ வாழ்க்கை முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளது.

2015 இல், எப்டிஐஐயில் 138 நாட்கள் நடந்த போராட்டத்தின் முக்கிய முகங்களில் ஒருவராக பாயல் இருந்தார். நாட்டின் மிகவும் மதிப்பு மிக்க திரைப்பட நிறுவனத்தின் தலைவராவதற்கு கஜேந்திர சவுகானுக்கு தொலைநோக்குப் பார்வை இல்லை என்பதை மாணவர்கள் நன்கு அறிந்திருந்தனர். தனது அதிருப்தியை வெளிப்படுத்திய பாயல் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து வகுப்புகளை புறக்கணித்து நான்கு மாதங்களுக்கும் மேலாக போராட்டம் நடத்தினார்.

போராட்டங்கள் தீவிரமடைந்ததால், பாயல் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது மட்டுமல்ல; அந்த நிறுவனத்திற்கான மானியமும் குறைக்கப்பட்டது. ஆனால் 2021 ஜூலை 18 அன்று, உலகின் மிகவும் குறிப்பிடத்தக்க திரைப்பட விழாக்களில் ஒன்றான கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் ‘எ நெட் ஆஃப் நோயிங் நத்திங்’ என்ற சிறந்த ஆவணப்படத்திற்கான ‘கோல்டன் ஐ’ விருதை பாயல் கபாடியா வென்றார். தன்னை எதிர்த்தவர்களை நிலைகுலையச் செய்யும்விதமாக அன்றைய தினம் செய்திகளில் இடம் பிடித்தார் பாயல். ஆனால் அந்தப் பெண்ணோ, இந்திய திரைப்பட உலகமோ வரலாறு படைப்பதற்கான முதல்படி இது என்பதை உணரவில்லை.

2021 ஆம் ஆண்டில் கேன்ஸில் ‘கோல்டன் ஐ’ விருதை வென்ற ‘எ நைட் ஆஃப் நோயிங் நத்திங்’ என்ற ஆவணப்படம் அவரது மாணவ வாழ்க்கையையும் உள்ளடக்கியது. புனே

ஃபிலிம் இன்ஸ்டிடியூட்டில் படிக்கும் இரண்டு பேர்தான் இந்த ஆவணப்படத்தின் முக்கிய கதாபாத்திரங்கள். ஒருவரையொருவர் காதலிக்கும் இந்த இரண்டு கதாபாத்திரங்களும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்கள் அல்ல. அதே காரணத்திற்காக குடும்பத்தால் தடைசெய்யப்பட்டு ஒருவரை யொருவர் பிரிந்து செல்லவும், ஒருவர் திரைப்பட நிறுவனத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இந்த ஆவணப்படம் கேன்ஸ் 2021 இல் இயக்குநர்களின் 'ஃபோர்ட்நைட்' பிரிவில் திரையிடப்பட்டது. வேலைநிறுத்தம் நடந்து கொண்டிருந்தபோதும், பாயல் பட வேலைகளில் தீவிரமாக இருந்தார். 2014இல் வெளியான 'வாட்டர்மெலன், பிஸ்அண்டு பார்கோஸ்ட்' தான் பாயலின் முதல் படம். 2017ல் 'தி லாஸ்ட் மாங்கோ பிஃபோர் தி மான்சூன்'என்ற படத்தை இயக்கினார். அந்தப் படத்தின் திரைக்கதை, இயக்கம், படத்தொகுப்பு ஆகியவற்றை பாயல் தானே செய்துள்ளார். 2018 இல், 'அண்ட்வாட் இஸ் திசம்மர் ஸேயிங்' திரைப்படமும் வெளியானது. பாயல் தனது மாணவப் பருவத்தில் எடுத்த படம் உட்பட மொத்தம் ஆறு படங்களை வெளியிட்டுள்ளார். தற்போது, 2024 ஆம் ஆண்டு 77ஆவது கேன்ஸ் சர்வதேச திரைப்பட விழாவில் இரண்டாவது மிக மதிப்புமிக்க விருதான 'ஜூரி கிராண்ட் பிரிக்ஸ்' வென்ற முதல் இந்திய இயக்குநர் என்ற வரலாற்றை பாயல் படைத்துள்ளார். இதன் மூலம், கலை மற்றும் கலைஞர்களுக்கு எதிரான பாஜக எழுப்பிய சுவர்களும் இடிந்து விழுகின்றன. ●

---

அஞ்சலி



## தோழர் எஸ் சேது

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கன்னியாகுமரி மாவட்ட முன்னாள் தலைவர் தோழர் எஸ் சேது அவர்கள் 06.05.2024 அன்று இயற்கை எய்தினார். தோழர் சேது அவர்கள் அரசு ஊழியர் சங்கம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு நடவடிக்கை குழுவில் இருந்து தங்கள் சங்க பணியை தொடங்கியவர் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மதுரை மாவட்ட செயலாளராக பணிபுரிந்து பணி மாறுதல் பெற்று கன்னியாகுமரி மாவட்டத்திற்கு பணிக்கு வந்தார் கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவராக/செயலாளராக பல ஆண்டுகள் இருந்தவர், பல முன்னணி தலைவர்களை உருவாக்கியதில் அவருடைய பங்கு மகத்தானது 2003 போராட்டத்தில் கலந்து கொண்டு ஒரு லட்சத்து 75 ஆயிரம் பேர் பணிநீக்கம் செய்யப்பட்டவர்களில் அவரும் ஒருவர் பின்னர் 999 பேர் பணிநீக்கம் செய்யப்பட்ட பின் அதிலும் ஒருவராக இருந்தார் அதன் பின்பு அரசு பணியில் சேர்ந்து 2006 ஆம் ஆண்டு பணி நிறைவு செய்தார் அதன்பின்பும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சிறந்த சங்க பணியில் பங்காற்றினார் அன்னாரின் மறைவிற்கு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் நூர்முகமத் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில மையத்தின் சார்பாக துணைப் பொதுச் செயலாளர் என். வெங்கடேசன் அவர்களும் மாநிலத் துணைத் தலைவர் சி.எஸ்.கிறிஸ்டோபர் அவர்களும் தூத்துக்குடி மாவட்ட செயலாளர் தோழர் தே.முருகன் அவர்களும் கன்னியாகுமரி மாவட்ட தலைவர் என்.பாலகிருஷ்ணன் மற்றும் மாவட்ட வட்ட நிர்வாகிகள் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகளும் மாவட்ட வட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். ●

கட்டுரை

# பழங்குடியினர் விடுதலைப் போராட்ட வீரர் பிர்சா முண்டா

**- பெரணமல்லூர் சேகரன்**

பிர்சா முண்டா ஆங்கிலேய அரசிடமும், உள்நாட்டு நிலவுடமைதாரர்களிடமும் அடிமைப்பட்டிருந்த பழங்குடி மக்களுக்காகப் போராடிய முதல் வீரர் ஆவார். தற்போதைய பீகார், ஜார்கண்ட் பகுதி பழங்குடி இனமக்களின் போராட்டத்திற்கு இந்திய விடுதலை இயக்கக் காலமான 19ஆம் நூற்றாண்டிலேயே வித்திட்டவர் ஆவார். பழங்குடி தலைவர்களிலேயே இவரின் உருவப்படம் மட்டும் தான் இந்திய நாடாளுமன்றத்தில் இடம் பெற்றுள்ளது.

இவரின் பெயரால் ஜார்க்கண்ட் மாநிலத்தின் தலைநகரான ராஞ்சியில் உள்ள விமான நிலையத்திற்கு இவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மேலும் சின்த்ரி என்ற இடத்தில் பிர்சா தொழில் நுட்ப மையம் Birsa Institute of Technology Sindri ஒன்றும், பெருல்லா என்ற இடத்தில் சித்தா கன்கோ பிர்சா பல்கலைக்கழகம் மற்றும் ராஞ்சியில் பிர்சா முன்டா அத்லடிக் வளாகம் ஒன்றும் அவரின் நினைவாக அரசு நிறுவியுள்ளது. அப்பகுதி மக்கள் இவரை மண்ணின் மைந்தன் (தர்த்தி அபா) என்றே அழைக்கிறார்கள்.

இவர் ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இருந்த போராளிகளில் மிகவும் மதிக்கத்தக்கவர் ஆவார். அவர் வாழ்ந்த 25 ஆண்டுகளில் அவர் செய்த போராட்டங்களை மக்கள் இன்றும் நினைவுகூருகிறார்கள். இவர் 'உழுபவனுக்கே நிலம் சொந்தம்' என்று அறைகூவல் விடுத்துப் போராடினார். இவர் 1875ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் தேதி இராஞ்சி மாவட்டத்தில் உலிகாட் என்ற இடத்தில் பிறந்தார். இவரின் தந்தையாரின் பெயர் சுகன் முண்டா ஆவார். ஆங்கிலேயர்களின் ஆட்சி இவருக்குப் பிடிக்கவில்லை அவர்கள் இந்திய மக்களை அடிமைப்படுத்துகிறார்கள் என்று வாதிட்டார். மக்களைச் சித்திரவதை செய்து அவர்களின் சொத்துக்களைச் சுரண்டிச் செல்கிறார்கள் என்று கூறினார். ஆங்கிலேய அரசின் ஆட்சியை முடிவுக்குக்கொண்டுவந்து இந்தியாவை இந்திய மக்களே ஆட்சி செய்ய வேண்டும் என்று உணர்த்தினார். சோட்டா நாக்பூர் பகுதியில் பழங்குடிகளுக்காக அவர் செய்த சாதனை மிகவும் பாராட்டப்படுகிறது.

ஜமீன்தார்கள் பழங்குடிகளின் நிலத்தை வட்டிக்குக் கடன் கொடுக்கிறேன் என்ற போர்வையில் பிடுங்கி வைத்திருந்தார்கள். பழங்காலத்தில் எழுத்துப்பூர்வமான பத்திரப்பதிவுகள் எதுவும் இல்லாததால் ஆங்கிலேயர்களின் சட்டங்கள் அவர்களின் நில உரிமைகளை எளிதில் பிடுங்கிக்கொள்ள உதவியாக இருந்தது. நீதிமன்றங்களில் இவர்களின் வழக்குகள் தோல்வியைத் தழுவின. இதன் காரணமாக நிலவுடைமைதாரர்களிடம் அடிமையாகவும், கூலிகளாகவும் வேலை செய்து பிழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்கள்.

அவர் பேசிய வாதங்கள் பழங்குடி மக்களிடம் எளிதில் சென்று சேர்ந்தது. அந்த காலகட்டமான 1890ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் பஞ்சம் தலைவிரித்தாடியது. அப்போதுதான் சோட்டா நாக்பூர் பகுதிகளில் மக்களை ஒன்று சேர்த்தார். 1894 அக்டோபர் மாதம் 1ஆம் தேதி பயிரிடும் உரிமைக்கான நிலுவை வரித்தொகையைத் தள்ளுபடி செய்யுமாறு போராடினார். இதுவே பழங்குடிகளுக்காக இந்தியாவிலேயே நடந்த முதல் போராட்டம் ஆகும். 1900ஆம் ஆண்டு கெரில்லா வீரர்களின் உதவிகொண்டு போராடிய இவரை ஆங்கிலேய அரசு கைது செய்தது. அதே ஆண்டு ஜுன் மாதம் 9ஆம் நாள் தனது 25ஆவது வயதிலேயே சிறையிலேயே மரணமடைந்தார் பார்சி முண்டா. பார்சி முண்டாவின் வாழ்க்கை வரலாற்றை மகாஸ்வேதாதேவி 'காட்டில் உரிமை' எனும் நாவலில் பழங்குடியின மக்களின் போராட்ட

வரலாறாகக் காட்சிப்படுத்தியிருப்பதும் இந்நூல் சாகித்ய அகாதமி விருது பெற்றதும் குறிப்பிடத் தக்கது.

இந்தியா விடுதலை அடைந்தும் இன்றுவரை பார்சி முண்டாவின் கனவு நிறைவேறவே இல்லை. பழங்குடிமக்கள் இன்னமும் தங்களை உயர்குடி என்று கூறிக்கொள்ளும் மக்களால் மறைமுக அடிமைத்தனத்தில் இருந்து மீண்டும் வரமுடியாத கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள். தொழிற்சாலை, நீர்ப்பாசனத் திட்டம் என்று அவர்களின் குடியிருப்பு இடப்பெயர்ச்சிக்கு உள்ளாக்கப்படுகிறது. வன உரிமை திருத்தச் சட்டத்தின் மூலம் பழங்குடியின மலைவாழ் மக்கள் பூர்வீக பூமியிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள். இவை போன்ற கொடுமைகளுக்கெதிராக பழங்குடியின மலைவாழ் மக்கள் சங்கத்தை ஏற்படுத்தி அவர்களின் உரிமைகளுக்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இடையறாது போராடி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் பழங்குடியினர்க்கான 3விழுக்காடு இட ஒதுக்கீட்டைப் போராடிப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

*(பழங்குடியினர் விடுதலைப் போராட்ட வீரர் பிர்சா முண்டா நினைவு நாள் ஜுன் 9)* ●

## அமைப்பு தின நிகழ்வு – செங்கல்பட்டு


தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 41-வது அமைப்பு தினம் செங்கல்பட்டு மாவட்டத்தில் அனைத்து வட்டக் கிளைகளிலும் கொடியேற்றி சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெரும்பாலான அரசு ஊழியர்கள் கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பங்கேற்றனர். அரசு ஊழியர் சங்க மாவட்ட அலுவலகத்தில் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாவட்ட தலைவர் தோழர் கே. பூங்குழலி அவர்களும் அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்ட செயலாளர் சி முகமது உசேன் அவர்களும் ஏற்றி வைத்தனர்.

மாவட்டத்தில் மொத்தம் 13 இடங்களில் சங்க அமைப்பு தின கொடியேற்ற நிகழ்வு நிகழ்ந்துள்ளது. குறிப்பாக புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைப்பு தின கொடியேற்ற நிகழ்வு நடைபெற்றுள்ளது சிறப்பு அம்சமாகும்.

இந்நிகழ்வில் இந்நிகழ்வில் பங்கேற்ற அனைத்து மாவட்ட வட்டக்கிளை நிர்வாகிகள் துறைவாரிச்சங்க நிர்வாகிகள் முன்னணி தோழர்கள் அனைவருக்கும் மாவட்ட மையம் சார்பாக பாராட்டுக்கள்.

**அஞ்சலி**



**தோழர் எம். இராமசாமி**

தோழர் எம். இராமசாமி அரசு ஊழியர் சங்க சேப்பாக்கம் பகுதி முன்னாள் தலைவர் மற்றும் ஓய்வூதியர் சங்க எம்.கே.பி. நகர் முன்னாள் தலைவராகவும் தொடர்ந்து தீவிரமாக சங்கப் பணிகளில் தொய்வின்றி செயல்பட்ட தோழர் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் 13.05.2024 மாலை 6.30 மணியளவில் மாரடைப்பால் காலமானார். மறைந்த தோழர் ராமசாமி உடலுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு. அன்பரசு, முன்னாள் மாநில துணைத்தலைவர்கள் பி.எஸ். அப்பர், எஸ்.ஏ. வெற்றிராஜன், அலுவலக மேலாளர் வே. வெங்கடேசன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். ●

# தமிழர்கள் மீது இத்தனை காழ்ப்பும் வெறுப்பும் ஏன்?

**- நமது நிருபர்**

தமிழகத்தைச் சேர்ந்த முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி வி.கே. பாண்டியன், ஒடிசா மாநில ஆளும் கட்சியான பிஜூ ஜனதா தள கட்சியின் முக்கிய பிரமுகராக இருக்கிறார். இதனால் பிரதமர் நரேந்திர மோடி, ஒடிசா பிரச்சாரங்களில் வி.கே. பாண்டியனையும் கடுமையாகச் சாடி வருகிறார்.

அந்த வகையில் தான், "பூரி ஜெகநாதர் கோவில் பொக்கிஷ அறைகளின் சாவியை 6 ஆண்டுகளாக காணவில்லை" எனவும் "அந்த சாவி தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டது" என்று, தமிழரான வி.கே. பாண்டியனைக் குறிவைத்து அவதூறு பொழிந்துள்ளார்.

பூரி பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "ஒடிசாவில் கனிம வளங்கள் ஏராளமாக இருந்த போதிலும் மக்கள் தொடர்ந்து வெளியே செல்லும் நிலை இருக்கிறது. ஒடிசாவின் நிலையைப் பார்த்து நான் வேதனைப்படுகிறேன். பிஜூ ஜன தளக் கட்சியின் சிறு நிர்வாகிகளும் தற்போது கோடீஸ்வரர்களாக இருக்கின்றனர். பூரி ஜெகநாதர் கோயிலின் பொக்கிஷ அறை சாவி காணாமல் போய்விட்டது. நமது வீட்டு சாவி காணாமல் போனால் ஜெகன்நாதரிடம் முறையிடலாம். ஆனால் ஜெகநாதர் கோயில் பொக்கிஷ அறையின் சாவியே காணாமல் போய்விட்டது. அந்தச் சாவி தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மக்கள் கூறுகிறார்கள்" என பேசியுள்ளார்.

அதாவது, வி.கே. பாண்டியன் ஒடிசாவின் சொத்துக்களை திருடி, தனது சொந்த மாநிலமான தமிழ்நாட்டிற்கு கொண்டு சென்று விட்டார் என்று, திருட்டுப் பட்டம் கட்டியுள்ளார். மற்றொரு வகையில், ஓட்டுக்காக ஒடிசா - தமிழ்நாடு ஆகிய இரு மாநில மக்களிடையே உச்சபட்ச மோதல்-வெறுப்பையும் தூண்டி விட்டுள்ளார்.

இதற்கு தமிழக அரசியல் கட்சிகள் மத்தியில் கண்டனங்கள் எழுந்துள்ளன.

இந்நிலையில், "தமிழர்களை திருடர்கள் என கூறும் அளவுக்கு பிரதமருக்கு ஏன் இவ்வளவு வன்மம்?" என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினும் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

"தேர்தல் பரப்புரையில் நாகரிக வரம்புகளை மீறாமல், கொள்கை - கோட்பாடுகள் - செயல்திட்டங்கள் மீது ஆக்கப்பூர்வமான விமர்சனங்களையும் தங்களது ஆட்சியின் சாதனைகளையும் முன்வைத்து வாக்கு சேகரிப்பதில் முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள், வெறுப்புப் பேச்சுகளின் மூலம் மக்களிடையே பகை உணர்வையும் - மாநிலங்களுக்கு இடையே குரோதத்தையும் தூண்டி வருவது நாட்டுக்கு நல்லதல்ல!

முன்னதாக, உத்தரப் பிரதேச மக்களை இழித்தும் பழித்தும் தென்னிந்தியர்கள்

பேசுவதாகத் தமிழ்நாட்டு மக்கள் மீது அபாண்டமான பழியைச் சுமத்தி இருந்தார். மதம், மொழி, இனம் மற்றும் மாநிலத்தின் பெயரால், இன்னொரு தரப்பு மக்களைத் தூண்டிவிடும் செயல் ஆபத்தானது என்று எனது கண்டனத்தை அப்போதே தெரிவித்து இருந்தேன். சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டிய அரசியல் தலைவரே பகையுணர்வைத் தூண்டுவது தவறு என்றும் கூறியிருந்தேன். ஆனாலும் தமிழ்நாட்டு மக்களை மோசமானவர்களாக இழித்தும் பழித்தும் பேசும் வழக்கத்தைப் பிரதமர் மோடி நிறுத்திக்கொள்ளவில்லை.

ஒடிசா மாநிலத்தில் தேர்தல் பரப்புரையில் பேசிய பிரதமர் மோடி, புகழ்பெற்ற ஜெகந்நாதர் ஆலயத்தின் பொக்கிஷ அறையின் தொலைந்து போன சாவிகள் தமிழ்நாட்டில் இருப்பதாகப் பேசி இருக்கிறார். இது, கோடிக்கணக்கான மக்களால் வணங்கப்படும் பூரி ஜெகந்நாதரை அவமதிப்பதோடு, ஒடிசா மாநிலத்தோடு நல்லுறவும் நேசமும் கொண்ட தமிழ்நாட்டு மக்களை அவமதிப்பதும் புண்படுத்துவதுமாகும்.

ஜெகந்நாதர் மீது அளவற்ற பக்தி கொண்ட ஒடிசா மக்களைத் தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராகத் தூண்டும் பேச்சல்லவா இது? ஆலயத்தின் பொக்கிஷத்தைக் கள வாடும் திருடர்கள் என்ற பழியைத் தமிழ்நாட்டு மக்கள் மீது பிரதமர் மோடி சுமத்த லாமா? தமிழ்நாட்டு மக்களை நேர்மை யற்றவர்கள் என்று கூறுவது, தமிழ்நாட்டை அவமதிப்பது அல்லவா? தமிழர்கள் மீது மோடிக்கு இத்தனை காழ்ப்பும் வெறுப்பும் ஏன்?

தமிழ்நாட்டுக்கு வரும்போது தமிழ்மொழியை உயர்வாகப் போற்றுவதாகப் பேசுவதும், தமிழர்களைப் போன்ற அறிவாளிகள் இல்லை என்று பாராட்டுவதும், அதேநேரத்தில் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ஒடிசா போன்ற மாநிலங்களில் வாக்கு சேகரிக்கும்போது தமிழ்நாட்டு மக்க ளைத் திருடர்களைப் போலவும், வெறுப்பு மிகுந்தவர்களாகவும் அந்த மாநிலங் களுக்கு எதிரானவர்களாகவும் பேசுவது இரட்டை வேடம். இதை மக்கள் புரிந்து கொள்வார்கள்!

வாக்குக்காகத் தமிழ்நாட்டையும் தமிழர்களையும் அவதூறு செய்வதைப் பிரதமர் நிறுத்திக் கொள்ள வேண்டும்!''

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். ( தீக்கதிர்) ●

## “ பஞ்ச் ”

**மொரப்பா**



உனக்கு வந்தா Self respect
எனக்கு வந்தா Ego...
நீ பேசலனா busy
நான் பேசலனா Avoid...
உனக்கு வந்தா possessive
எனக்கு வந்தா doubt...
நீ பார்த்தா just seeing
நான் பார்த்தா jolluuu...
நீ பண்றது எல்லாம் correct
நான் பண்ணினா Scene...
உனக்கு வந்தா blood...
எனக்கு வந்தா Tomato chutneyahh

கட்டுரை

# புதிய தேடல்களில் தொலைகின்ற வாழ்க்கை!

**– தெ. வாசுகி**

“செல்போனை பெற்றோர் வாங்கித் தரவில்லை என்பதால் சிறுவன் தற்கொலை”, “செல்போன் விளையாட்டால் விபரீதம் மாணவன் தற்கொலை”, “செல்போன் விளையாட்டால் சிறுவன் மனநலம் பாதிப்பு”, தேர்வில் தோல்வி மாணவி தற்கொலை, தேர்வில் வெற்றி ஆனால் மார்க் குறைவு மாணவி தற்கொலை, அப்பா அடிச்சிட்டார், அம்மா திட்டினாங்க என்று வீட்டை விட்டு ஓடிபோதல். என்று சின்ன விஷயங்களுக்கு குழந்தைகள் மனமுடைந்து தவறான முடிவை தேடிக்கொள்ளுதல் என்பது தொடர்ந்து நிகழ்கிறது. இதற்கெல்லாம் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தால் நமது அன்றாட வாழ்க்கை முறையின் மாற்றமும், நாம் தவறவிட்டுவிட்ட நம் முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்திருந்த விளையாட்டுடன், உணவுடன். உரையாடலுடன் சேர்ந்த உடல் நலம் ஆரோக்கியம் ஆகியவற்றை தவற விட்டுவிட்ட சில தலைமுறைகளின் ஏக்கமுமாக உள்ளது.

1990 களுக்கு முன்னால் பலகிராமங்களுக்கு தொடக்கப்பள்ளி அல்லது நடுநிலைப்பள்ளி என்று ஒரு பள்ளிக்கூடம் தான் இருக்கும். உயர்நிலைப்பள்ளி, மேல் நிலைப் பள்ளிகளில் படிக்க நகரத்திற்கு செல்லவேண்டியிருக்கும். பெரும்பாலும் பல பெண்கள் வீட்டு வேலை, தங்கச்சி, தம்பிகளை கவனித்துக் கொள்வதற்காக கல்வியை தொடரமுடியாத நிலை ஏற்படும். ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும் நகரத்திற்கு சைக்கிளில் சென்று கல்வி பயில்வார்கள். பக்கத்து கிராமங்களில் பயிலும் பிள்ளைகள் பெரும்பாலும் பல கிலோ மீட்டர்கள் நடந்தே கல்வி கற்க செல்வார்கள். அவ்வாறு பள்ளிக்குச் சென்று திரும்பும் வழியில் தட்டான் பிடித்து விளையாடுவது பொன்வண்டு பிடித்து விளையாடுவது, மரத்தில் ஏறி மாங்காய் பறிப்பது. குளத்தில் ஆட்டம் போடுவது. கிணற்றில் குதித்து யார் முதலில் அடிமண் எடுத்து வருவது என்று வழிநெடுக அலப்பறைகள் செய்துகொண்டே வீட்டிற்கு வருவார்கள். வீட்டில் அம்மா செய்து வைத்த பலகாரம், இல்லைன்னா அப்பா சந்தையில் வாங்கி வந்த நொறுக்குத் தீனி கொஞ்சம் கொறித்துவிட்டு கொஞ்சம் சிநேகிதர்களுக்கு எடுத்துக்கிட்டு சாயங்காலம் வீதியின் தெரு முனையில் இருக்கும் ஒரே ஒரு விளக்கு கம்பத்தின்கீழ் அத்தனை பிள்ளைகளும் ஒன்று கூடி அவரவர் வயதிற்கேற்ப குழு அமைத்து கூட்டமாக விளையாடுவார்கள்.

தமிழர்களின் வாழ்வியலோடு இணைந்த விளையாட்டுகளில் உள் விளையாட்டுகள், வெளி விளையாட்டுகள் என்றும் என்று



இரண்டாக பிரித்து இருந்தனர். தாயக்கட்டை, பல்லாங்குழி, அச்சாங்கல், சீதைப் பாண்டி, ஆடு புலியாட்டம், பாம்பும் ஏணியும் பரமபதம், சதுரங்கம், சுண்டாட்டம் (கேரம் போர்ட்) கூட்டாஞ் சோறாக்கல், கண்ணாமூச்சி, கிச்சு கிச்சு தாம்பலம், பருப்புக்கடமா பருப்புகட போன்ற விளையாட்டுகள் வீட்டிலேயே விளையாடக்கூடியதாக இருக்கும் இந்த விளையாட்டுகளை பெரும்பாலும் பெண்பிள்ளைகள் பாடல் பாடிக்கொண்டே விளையாடுவார்கள்.

"மழைவருது மழைவருது
நெல்லு குத்துங்க
முக்காபடி அரிசி எடுத்து
முறுக்கு சுடுங்க
ஏர் ஓட்டுற மாமனுக்கு
எண்ணி வையுங்க
சும்மா இருக்குற மாமனுக்கு
சூடு வையுங்க"

என்று வேடிக்கையாக பாடிக்கொண்டே விளையாடுவார்கள்

வெளியில் வீதிகளில் விளையாடும் விளயாட்டுக்களாக, ஒருகுடம் தண்ணி ஊத்தி, குலை குலையா முந்திரிக்காய், பச்சக்குதிரை தாண்டுதல், மூன்று கல் ஆட்டம், ஏழுகல் எறிபந்து, உப்புமூட்டை தூக்கல், கோலி, கில்லி, ஒத்தையா ரெட்டையா, கரகர வண்டி,




பனங்காத்தாடி விடுதல், நுங்கு வண்டி ஓட்டுதல் பம்பரம், நொண்டி, கபடி போன்ற ஏராளமான குழந்தை விளையாட்டுகள் பழங்காலத்திலிருந்தே விளையாடப்பட்டு வந்தன.

"ஒரு குடம் தண்ணி ஊத்தி ஒரே பூ பூத்தது
இரண்டு குடம் தண்ணி ஊத்தி இரண்டே பூ பூத்தது"

என்ற பாடலும்,

"குலை குலையாய் முந்திரிக்கா
நரியே நரியே சுத்திவா
கொள்ளையடித்தவன் எங்கிருக்கான்
கூட்டத்திலிருக்கான் கண்டுபிடி"

என்ற பாடலும் புத்தியை கூர்மையானதாக ஆக்குகிறது. மனக்கணக்குப் பயிற்சி அளித்து கணிதத்திறனை வளக்கிறது. மூளையை சுறுசுறுப்பாக்குகிறது, ஞாபக சக்தி அதிகரிக்க உதவுகிறது. மன அழுத்தத்தையும் சோர்வையும் விரட்டி உடலைப் புத்துணர்ச்சியுடன் ஆரோக்கியமாக இருக்க உதவுகின்றன. இதுபோன்ற விளையாட்டுகளால் சிறு வயதிலிருந்தே எதனையும் சமாளிக்கும் திறன், எதிரிகளை எதிர்கொள்ளும் திறன் உருவாகிறது.

"நான் தான் ஒங்கப்பன்டா
நல்லமுத்து பேரன்டா
வெள்ளிச் சிலம்பெடுத்து
விளையாட வாரேன்டா
தங்கச் சிலம்பெடுத்து
தாலி கட்ட வாரேன்டா
வாரேன்டா வாரேன்டா........"

என்று கபடி விளையாடும் போது கோட்டைத் தாண்டி எதிரியின் எல்லைக்குள் தனியொருவனாகச் சென்று மூச்சைப் பிடித்துக்கொண்டு பாடுதல், எதிரிகளுக்கு சவால் விடுதல் தனியாய் எதிர்கொள்ளும் துணிவையும் தருகிறது. விளையாட்டு என்பது ஆண் பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் உடலுக்கும் மனதுக்கும் புத்துணர்வு அளித்து நமது அன்றாட வாழ்வின் ஒரு அங்கமாக திகழ்ந்தது.

"ஓடி விளையாடு பாப்பா –நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடிவிளையடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா"

மகாகவி பாரதியார் குழந்தைகள் ஓடி விளையாடுவதும், கூடி விளையாடுவதும் குழந்தைகளுக்கான சிறந்த பண்புகளாக குறிப்பிடுகின்றார். முன்பெல்லாம் சிறுகுழந்தைகள் வீட்டு முற்றங்களில் நன்றாக ஓடி விளையாடுவது உண்டு. உடல் தசைகள் இறுக்கம் கொள்ளவும், அவர்களை திடகாத்திரமானவர்களாக மாற்றவும் உதவியது

ஆனால் 1990க்குப் பிறகு தனியார் மயம் தாராளமயத்தின் காரணமாக தனியார் பள்ளிகள் அதிகரிக்க தொடங்கின, அறிவியல் பூர்வமாக 5 வயதில் பள்ளிக்குச் செல்ல வேண்டிய குழந்தைகள் எல்.கே.ஜி வகுப்பில் மூன்று வயதில் பள்ளிக்கூடம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பிறகு ப்ரி.கே.ஜி வகுப்பில் இரண்டு வயதில் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்றைய காலத்தில் சில பள்ளிகளில் இடம் கிடைக்க வேண்டும் என்றால் தாயின் வயிற்றில் சிசு உருவான உடனே விண்ணப்பம் வாங்கிவிடுகின்ற நிலையும் உள்ளது. கறிக்காக பண்ணையில் அடைத்து வளர்க்கப்படும் கோழிகளைப் போல மார்க் எடுப்பதற்காக குழந்தைகள் வளர்க்கப்படுகின்றார்கள். அதற்காக தனியார் பள்ளிகளில் விளையாட்டு நேரத்தை கூட ஸ்பெஷல் க்ளாஸ் வைத்து மார்க் எடுக்கும் இயந்திரமாகவே மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் மற்ற குழந்தைகளுடன் விளையாடாமல் தனித்து விடப்படுகின்றனர். இதனால் சிறுவர் சிறுமியர் செல்போன்களில் உள்ள விளையாட்டுகளுக்கு அடிமையாகிப் போகிறார்கள். இதனால் சமூகத்தோடு ஒட்டாமல் சின்ன சின்ன பிரச்சினைகளுக்கு மனமுடைந்து தவறான முடிவுகளை எடுத்துவிடுகின்றனர்.

அதிக நேரம் செல்போன் பார்க்கும் குழந்தைகளுக்கு பேச்சு தாமதம், மனநல குறைபாடு, குழப்பம் மற்றும் சிந்தனை தடைபடுதல், உடல் செயல்பாடு குறைவதால்,




உடல் பருமன் மற்றும் மோசமான எலும்பு ஆரோக்கியம் இந்த செல்போனில் எவ்வளவு இருந்தாலும் இன்று இந்த செல்போன் பயன்பாடு தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.

ஆய்வு ஒன்றில், இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 90 சதவீதம் பேர் செல்போனைப் பார்த்துக்கொண்டே சாப்பிடுவதாக தெரியவந்துள்ளது. இப்படி சாப்பிட்டால்தான் அவர்கள் நிரம்ப சாப்பிடுகிறார்கள் என்று குழந்தைகளின் தாய்மார்கள் நினைக்கிறார்கள், ஆனால் இது எவ்வளவு பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் சிந்திக்க மறந்துவிடுகிறார்கள். இத்தகைய செயல்முறைகள் படிப்படியாக குழந்தைகளின் மன மற்றும் உடல் ஆரோக்கியத்தை பாதிக்கிறது.

முன்பெல்லாம் கூட்டு குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் பாதுகாப்பாக வளர்ந்தனர். ஆனால் இன்று தனி குடித்தனங்கள் மிகுந்து விட்டது. குடும்பத்தில் தாய் தந்தை குழந்தைகள் ஒன்றாக வசித்தாலும் ஆளுக்கொரு செல்போன் வைத்துக்கொண்டு பிரிந்தே கிடக்கின்றனர். இல்லத்தில் பொக்கிஷமாக கருதவேண்டிய தாத்தா பாட்டிகள் பலர் முதியோர் இல்லங்களில் இருக்கின்றனர். இன்றைய விலைவாசி உயர்வில் பெற்றோர் இருவரும்



**பம்பரம்**

**குறித்திறன் அதிகரிக்கும்.**
**பொறி நுட்பம் விளங்கும்.**
**எதிராளியின் திட்டம் பிடிபடும்.**
**பொருமையின் தேவை புரியும்.**

பணிக்குச் செல்ல வேண்டும், ஆனால் அக்கம்பக்கத்தினர் அண்டைவீட்டுக்காரர்களை நம்பி குழந்தைகளை ஒப்படைக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது காரணம் வயத வித்தியாசமின்றி பாலியல் சீண்டல்களால் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

பல வீடுகளில் தங்களது குழந்தைகளுக்கு விளையாடுவதற்கு செல்போனை கொடுத்துவிட்டு அதைப் பார்த்து மகிழும் சில பெற்றோரும் உண்டு. ஆனால் அதுவே, பிள்ளைகளை ஆக்கிரமித்துக் கொள்ளும் என்பதை ஏனோ அவர்கள் உணருவதில்லை. இதனால் குழந்தைகள் எந்த நேரமும் செல்போன்களில் மூழ்கிக்கிடப்பதையே பார்க்கமுடிகிறது. செல்போனை வெகுநேரம் பார்ப்பதால் சிறுவயதிலேயே கண்பார்வை பாதிக்கும் வாய்ப்பு அதிகமாகிறது. செல்போன் உபயோகப்படுத்தும் குழந்தைகளுக்கு ஏற்படும் உளவியல் பாதிப்பு குறித்து உளவியல் மருத்துவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். “துப்பாக்கியை வைத்து சுடுதல் போன்ற விளையாட்டுகளை செல்போனில் குழந்தைகள் விளையாடுகின்றனர். இதில் அவர்களுக்கு ஒரு திருப்தி கிடைக்கிறது. உளவியல் ரீதியான பிரச்சனைகளுக்கு இது வழிவகுக்கும். யாருடனும் பழகாமல் செல்போனுக்கு அடிமையாவது ஆபத்து. எது போன்ற விளையாட்டுக்களை குழந்தைகள் விளையாடுகிறார்கள் என்பதை பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும். ஆன்லைனில் யாருடன் பேசுகிறார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

கூட்டுக்குடும்ப வாழ்வியல் முறை சிதைந்து போனதும், பாரம்பரிய விளையாட்டுக்களையும் அதனுடன் சேர்த்து நம்முடைய முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்த ஆரோக்கிய வாழ்க்கையையும் நாம் புறந்தள்ளியதன் விளைவு இன்று நம் குழந்தைகளை நம்மால் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. குழந்தையின் கையில் உள்ள செல்போனை எந்த சமாதானமும் சொல்லி பிடுங்க முடியாத நிலைமைக்கு பெற்றோர் ஆளாகியுள்ளனர். செல்போனை குழந்தைகள் தொடர்ந்து பார்ப்பதால் ஏற்படும் விளைவுகளை நாம் தினசரி பார்க்கிறோம் படிக்கிறோம். நம்முடைய குழந்தைகளை ஆரோக்கியமாக வளர்த்தெடுப்பதும் கல்வி அறிவு திறமைகளில் சிறந்தவர்களாக வளர்ப்பதற்கும் நாம் நம்முடைய முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்த தமிழர்கள் பாரம்பரிய விளையாட்டுக்களுக்கு குழந்தைகளை மடை மாற்றம் செய்ய வேண்டும். கொஞ்சம் கடினமான செயல்தான். கஷ்டப்பட்ட நாம் அதை செய்துவிட்டால் நம் குழந்தைகள் ஆரோக்கியமாக தலைமுறையினராக வளர்வார்கள் வாழ்வார்கள் புதிய புதிய கண்டுபிடிப்புகளை ஏற்படுத்துவார்கள். தமிழ் முன்னோர்கள் வகுத்து வைத்துள்ள ஒவ்வோர் பாரம்பரிய விளையாட்டிலும் என்ன உடல்நலம் உண்டாகிறது என்பதை அந்தந்த விளையாட்டுக்களின் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. காலம் இன்னும் கடந்து விடவில்லை. நம்முடைய குழந்தைகள் எல்லாம் அறிவானவர்களாக மட்டும் இருந்தால் போதாது. ஆரோக்கியமானவர்களாகவும் வளர வேண்டும். கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பாடிய “ஆளும் வளரணும் அறிவும் வனரணும் அதுதான்டா வளர்ச்சி ...” என்ற வரிகளுக்கு ஏற்ப நாம் நம்முடைய குழந்தைகள் மட்டுமல்ல நம்மைச் சுற்றியுள்ள குழந்தைகளின் ஆரோக்கியத்தையும் தமிழ் பாரம்பரிய விளையாட்டுக்களின் மூலம் வளர்தெடுப்போம். ●

கட்டுரை

# கூட்டாட்சிக் கட்டமைப்பை தகர்க்கும் உச்சநீதிமன்றத் தீர்ப்பு

**– இரா. மங்களபாண்டியன்**

ஜம்மு மற்றும் காஷ்மீருக்கு அரசியலமைப்பின் 370-ஆவது பிரிவின் கீழான சிறப்பு அந்தஸ்தை ஒன்றிய அரசு ரத்து செய்தது செல்லும் என்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 5 நீதிபதிகள் அடங்கிய சாசன அமர்வு தீர்ப்பளிததுள்ளது.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்திற்கென்று தனியாக உள்ள இறையாணமை இல்லை என்றும் இந்திய அரசியலமைப்பை ஜம்மு காஷ்மீரில் செயல்படுத்த மாநில அரசின் ஒப்புதல் தேவையில்லை என்றும் கூறியிருக்கும் அரசியல் சாசன அமர்வானது சட்டப்பிரிவு 370 என்பது ஒரு தற்காலிக விதிதான் என்று வழங்கியுள்ளது.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு விரைவில் மாநில அந்தஸ்து வழங்கப்படும் என்று சொலிசிட்டர் ஜெனரல் உறுதி அளித்துள்ளதால், ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசமாக சீரமைக்கப்பட்டதன் செல்லுபடி தன்மை குறித்து தீர்ப்பளிக்க வேண்டியதில்லை என்று கூறியுள்ள உச்சநீதிமன்றம், லடாக்-கை யூனியன் பிரதேசமாக மாற்றியது செல்லும் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும் ,செப்டம்பர் 30 2024-க்குள் ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவைக்கு தேர்தல் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு, இந்திய தேர்தல் ஆணையத்துக்கும் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

2019 டிசம்பர் 5 அன்று ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு 370 மற்றும் 35ஏ ஆகியவற்றை ரத்து செய்தது மத்திய அரசு. இது ஜம்மு-காஷ்மீர் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்றும், மேலும் மாநில அந்தஸ்தைப் பறித்து, ஜம்மு-காஷ்மீரை இரண்டு யூனியன் பிரதேசங்களாக பிரித்ததை ஏற்க முடியாது என்றும் உச்சநீதிமன்றத்தில் அரசியல் கட்சிகள், தனிநபர்கள் சார்பில் 23 ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்கு மீதான விசாரணையிலேயே உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு மேற்கண்ட தீர்ப்பை வழங்கியுள்ளது.

ஒரு மாநிலம் குடியரசுத் தலைவர் ஆட்சியின் கீழ் இருக்கும் போது நாடாளுமன்றம் எந்தச் செயலையும்-சட்டமியற்றுவதையும், மாற்ற முடியாத விளைவுகளைக் கொண்ட எந்தச் செயலையும்-செய்ய முடியும் என்று கூறியிருப்பது கூட்டாட்சிக் கொள்கை மீதான மிகமிகக் கடுமையான தாக்குதலாகும். நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள இந்த ஆபத்தான நியாயப்படுத்தல் அரசியல் அமைப்பின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்வதாகும். முாநிலங்களின் உரிமைகள் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும். தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் இல்லாத நிலையில் பல விநோதமான சரி செய்ய முடியாத செயல்களையும் அது அனுமதிக்கிறது. ஊச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஆமோதித்து மனுதாரர்களின் வாதங்களை நிராகரித்துள்ளது. அந்த மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த ஒரு பிரதிநிதியையும் ஈடுபடுத்தாமல் அதற்கான வாய்ப்போ தராமல் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வதற்கு ஏற்றவாறு குடியரசுத் தலைவர் ஆட்சியைத் திணித்து ஒன்றிய அரசு மோசமான முறையில் செயல்பட்ட பின்னணியில் தற்போதைய தீர்ப்பு வெளிவந்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை நீக்க வேண்டும் என்பது ஆளும் ஒன்றிய அரசின் நீண்ட கால லட்சியம். இதனை நிறைவேற்ற அது ஒரு சிக்கலான

செயல்முறையை மேற்கொண்டது. இரண்டு யூனியன் பிரதேசமாக பிரித்து அம்மாநிலம் தரமிறக்கப்பட்டது. 05.08.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட ஆணை ஒன்றின் மூலம் இதைச் செய்தது.

ஆகஸ்ட் 5 அன்று பிறப்பிக்கப்பட்ட அந்த ஆணையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கான அரசியலமைப்புச் சட்டத்தையே முழுமையாக மாற்றும் விதத்தில் சில வரையறைகளை வகுத்திருந்தது, அதன்படி மாநில சட்டமன்றமே, மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்வதற்கான பரிந்துரையைச் செய்யலாம் என்று மாற்றியிருந்தது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 370(3) இன் படி, ஜம்மு- காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்யும் அதிகாரம் அரசியல் நிர்ணய சபைக்குத்தான் உண்டு. ஆனால் தற்போது அரசியல் நிர்ணய சபை என ஒன்று இல்லை. எனவே அரசியல் நிர்ணய சபைக்கான அதிகாரத்தை மாநில சட்டமன்றமே நிறைவேற்றலாம் என ஆகஸ்ட் 5 ஆணையில் ஒன்றிய அரசு மாற்றம் செய்தது. எனினும் ஒன்றிய அரசின் ஆகஸ்ட் 5 ஆணையின் பகுதிகள் அரசியல் சட்ட விரோதமானவை என்று நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அரசியல் சட்டப்பிரிவு 370இல் திருத்தம் செய்வது அந்த பிரிவின் விதிகளின்படியே அனுமதிக்க முடியாதது என்றும் நீதிமன்றம் தனது தீர்ப்பில் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே வேளையில் ஒரு விநோதமான திருப்பமாக 2019 ஆகஸ்ட் 6 அன்று ஒன்றிய அரசு வெளியிட்ட அறிவிக்கையில், அரசியல் சட்டப் பிரிவு 370 செல்லத்தக்கத என்றும் அதே நேரத்தில் எந்தவிதமான பரிந்துரையும் இல்லாமல் இதை செல்லத்தக்கதாக இல்லாமல் செய்வதற்கு குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தது. எந்த விதமான பரிந்துரையும் இல்லாமல் மாநிலத்தின் சிறப்பு அந்தஸ்தை குடியரசுத் தலைவர் நீக்க முடியும் என்றும் குறிப்பிட்டிருந்தது. 1957இல் அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்ட பிறகு, இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஜம்மு- காஷ்மீர் மாநிலத்தில் படிப்படியாக அமல்படுத்தப்பட்டு வருகிறது என்றும், சிறப்பு அந்தஸ்து நீக்கமானது அத்தகைய ஒருங்கிணைந்த செயல்முறைகளின் உச்சகட்டமே தவிர வேறொன்றுமில்லை என்றும் நீதிமன்றம் நியாயப்படுத்தியுள்ளது. இந்த வாத்தை ஏற்றுக் கொள்வதாகவே வைத்துக் கொண்டாலும் அரசியல் நிர்ணய சபை இன்று இல்லாத நிலையில் இந்தியாவின் இறையாண்மைக்கு ஜம்மு-காஷ்மீர் இணங்கி வந்திருந்த நிலையிலும் கூட எஞ்சியிருக்கும் தன்னாட்சிஅம்சங்களை குழிதோண்டி புதைக்க விரும்பும் ஒன்றிய அரசாங்கத்தின் நோக்கத்திற்கு இருந்த சிறிதளவான தடையும் இன்று அகற்றப்பட்டுவிட்டது. இது கூட்டாட்சி மற்றும் ஜனநாயகத்தின் அனைத்து நியதிகளுக்கும் எதிரானது. ஜம்மு-காஷ்மீர் எந்தவித தனித்த இறையாண்மையும் கொண்டிருக்கவில்லை என்பதில் சந்தேகமில்லை ஆனால் தனி அரசியலமைப்ப, எஞ்சிய சட்ட அதிகாரங்கள், மாநிலம் குறித்த பிரச்சனைகளில் நாடாளுமன்றம் சட்டம் இயற்ற வேண்டுமானால் அதற்கு தேவைப்படும் சட்டமன்றத்தின் சம்மதம் இவைகளை ஜம்மு-காஷ்மீருக்கு வழங்கும் சட்டப்பிரிவு 370 ஒரு சமரச்சீரற்ற கூட்டாட்சியை பிரதிநிதித்துவம் செய்கிறது என நீதிமன்றம் கூறியுள்ளது.

உண்மையில் மேற்கண்ட அதிகாரங்கள் மட்டும் அம்மாநிலத்திற்கு எவ்விதமான தனித்த இறையாண்மையையும் அளிக்காது. ஆனால் அம்மாநிலத்திற்கு எவ்விதமான தனித்த இறையாண்மையையும் அளிக்காது. ஆனால் அம்மாநிலத்திற்கு நிறைவேற்ற வேண்டிய வரலாற்றுக் கடமைகைள் மற்றும் அரசியல் அமைப்பை உருவாக்கிய தலைவர்களால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் ஆளும் கட்சியின் விருப்பப்படி காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளதை எப்படி நியாயப்படுத்த முடியும் என்பது புரியவில்லை. காஷ்மீர் தலைவர்களுக்கும் ஒன்றிய அரசுக்கும் இடையேயான நிலைப்பாடு, உரையாடல்,

அது இந்தியாவுடன் இணைந்த சூழல் மற்றும் நிபந்தனைகள், முற்போக்குத்தன்மை நிறைந்த அரசியல் அமைப்பு வழிமுறைகள் ஆகியவற்றை வழங்கி இணைப்பு உடன்பாடு மற்றும் அதன் செயல்முறைகள் மூலம் இந்தியாவுடனான காஷ்மீரின் ஒருங்கிணைப்பு கட்டமைக்கப்பட்டுள்ளத. பன்னெடுங்காலமாக இது நடைபெற்று வந்துள்ளது என்பது வசதியாக மறக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜம்மு-காஷ்மீர் மாநில அந்தஸ்து இரண்டு யூனியன் பிரதேசங்களாக மறுசீரமைக்க அரசியலமைப்புச்சட்டம் அனுமதிக்கிறதா என்பது குறித்த தீர்ப்பை நீதிமன்றம் வழங்கத் தவறியுள்ளது. நீதித்துறையின் தோல்விக்கு இது ஒரு வியக்க வைக்கும் எடுத்துக்காட்டு. ஒரு மாநிலத்தை தரமிறக்க, அரசியலமைப்பின் மூன்றாவது பிரிவை முதன்முறையாக பயன்படுத்தியது குறித்த கேள்விக்கு தீர்ப்பளிக்க வேண்டாம் என நீதிமன்றம் முடிவு செய்தது அதிர்ச்சி அளிப்பதாகும்.

ஜம்மு-காஷ்மீர் மாநில அந்தஸ்து மீட்டெடுக்கப்படும் என அரசாங்க கூடுதல் தலைமை வழக்கறிஞர் (சொலிசிட்டர் ஜெனரல்) உறுதியளித்தார் என்பது தான் ஒரே காரணம். புரிகாரம் மேற்கொள்வதாகச் சொல்லப்படும் ஓர் உத்தரவாம் எந்த ஒரு நடவடிக்கையையும் செல்லத்தக்கதாக, மாற்ற முடியுமா? அதே நேரத்தில், லடாக்கை தனி யூனியன் பிரதேசமாக உருவாக்கியதை நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. எந்த ஒரு மாநிலத்தின் சில பகுதிகளை பிரித்தெடுத்து புதிய யூனியன் பிரதேசம் உருவாக்கவும், அது குறித்து பரிசீலிக்கவும் இந்த தீர்ப்பு வழிவகுக்கிறத. அதேபோல மாநில அரசு மற்றும் அதன் சட்டமன்றத்தின் சார்பாக தாங்களே முடிவெடுக்கும் குடியரசுத் தலைவரின் அதீத அதிகாரத்துக்கோ நாடாளுமன்றத்தின் தகுதிக்கோ எந்த வரம்பும் இல்லை என்ற நீதிமன்ற நிலைப்பாடு சமமான ஆபத்து நிறைந்தது. குறிப்பாக மாநிலச் சட்டப் பேரவைகளில் சட்டம் இயற்ற முடியாத அதிகாரங்கள் பற்றிய குறிப்பு, மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அதிகாரங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இத்தீர்ப்பின் பின்னணியில் ஒரு மாநிலத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ஒருபோதும் செய்யாத அசாதாரண நடவடிக்கைகளைத் தனது சொந்த நாடாளுமன்ற பெரும்பான்மை மூலம் நிறைவேற்றும் வகையில், மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சியைதானே உருவாக்கும் அரசாங்கங்கள் அமலாக்கலாம்.

அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுக்கு ஒப்புதல், மாநிலங்களுக்கு இடையே ஒப்பந்தங்களை ரத்து செய்துல், முக்கிய வழக்குகளை திரும்பப் பெறுதல், பெரிய அளவில் கொள்கை மாற்றங்களைக் கொண்டு வருதல், குடியரசுத்தலைவர் ஆட்சியின் கீழ் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாநில நலன்களை சேதப்படுத்தினால், பின் நாட்களில் தேர்ந்தெடுக்கப்படும் அரசாங்கங்கள் மூலம் மீட்டெடுக்கப்படலாம் என்ற கருத்து மட்டும் சற்று ஆறுதல் அளிக்கிறது.

இந்தத்தீர்ப்பு ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் மீதான இந்தியாவின் இறையாண்மையை சரியான முறையில் நிலைநிறுத்துவதாகத் தோன்றினாலும், அதிகார அமைப்புகளின் வரம்புகளை வலுவிழக்கச் செய்கிறது. அச்சமடையும் அளவிற்கு கூட்டாட்சியை மாண்பிழக்கச் செய்கிறது. செயல்முறைகளைச் சிதைக்கிறது. ●

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com



தஞ்சாவூர் மாவட்டத் தலைவர் தோழர் சிவ.ரவிச்சந்திரன் - பணி ஓய்வு பாராட்டு விழா




தர்மபுரி மாவட்ட முன்னாள் பொருளாளர் தோழர் கே. புகழேந்தி - பணி ஓய்வு பாராட்டு விழா



தென்காசி மாவட்டத் தலைவர் தோழர் திருமலை முருகன் - பணி ஓய்வு பாராட்டு விழா





கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் - நாகப்பட்டினம்

Registered Postal Registration No. TN/CH/(C)/200/2024-2026 WPP.No.TN/PMG(CCR)/
WPP-431/2024-2026 RNI No.68584/81 Posted at Egmore RMS-1 Pathirika Channel
Date of Publication 1st Week of Every Month - Posted on 10.06.2024




கட்டணமில்லா சிகிச்சையை உறுதிப்படுத்த காப்பீட்டு நிறுவனத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை



சிவகங்கை மருத்துவக் கல்லூரி முதல்வருடன் சந்திப்பு



Printed and Published by M.Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai-600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai-600002.
Editor: A.SELVAM. Phone: 28441286 E-mail: arasuoozhiyar@gmail.com